விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 12 செவ்வாய்க்கிழமை (26.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097




## மோ.சைக்கிள் – சைக்கிள் விபத்து முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் –துவிச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் 24

## ஜனநாயக நாட்டில் குடும்ப ஆட்சி வேண்டாம்! குமார வெல்கம விடாப்பிடி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட போவதாக பொய்யான வதந்திகள் பரப்பப்படுவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் 24

# இலங்கை மோசமான விளைவை சந்திக்கும்

# தமிழ்க் கூட்டமைப்பு மீண்டும் எச்சரிக்கை



(கொழும்பு) ஐ.நா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் இலங்கை மோசமான விளைவை எதிர்கொள்ளும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(24-ம் பக்கம் பார்க்க...)

## ஐ.நாவின் தீர்மானத்தை குப்பையில் எறிய வேண்டும்

### மகிந்த அணியினர் சீற்றம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆட்டத்திற்கு ஆடவே முடியாது என மகிந்த அணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அத்தோடு, ஐ.நா. தீர்மானத்தை குப்பையில் தூக்கியெறிய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ள அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆட்டத்துக்கு எல்லாம் எம்மால் ஆடவே 24

## ஜெனிவா தீர்மானத்தை அமுல்படுத்த இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும்

### ஐ.நா ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானங்களை அமுல்படுத்த இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதற்கான உறுதி மொழியை வழங்கியதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. 24

## மெகா கூட்டணியை பிரகடனப்படுத்த ஐ.தே.கட்சி திட்டம்

(கொழும்பு)

மே தினத்திற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஆரம்பிக்கவுள்ள மெகா கூட்டணியை பிரகடனப்படுத்த திட்டமிட்டுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டம் இம்முறை 24

## க.பொ.த சா/த பெறுபேறு நாளை மறுதினம் வெளியீடு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று 24

## தமிழ்க் கட்சிகளை ஒன்றாக கொண்டுவர முடியவில்லையே!

### சிவாஜிலிங்கம் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது யுத்தம் மற்றும் அரசியல்தீர்வு சார்ந்த விடயங்களில் தமிழ் கட்சிகளை ஒரே கொள்கையின் கீழ் கொண்டுவர முடியாமல் போய்விட்டதாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். 24

## இலங்கைக்கு யாரும் உத்தரவிட முடியாது!

### என்கிறார் வடக்கு ஆளுநர்

(கொழும்பு)



ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு உத்தரவிட முடியாது என வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளு 24

## ஏப்ரல் மாத இறுதிவரை மின்வெட்டு தொடரும்!

### மின்சாரசபை விளக்கம்

(கொழும்பு)

ஏப்ரல் இறுதியில் பருவகால மழைவீழ்ச்சி ஏற்படும்வரை நாடு முழுவதும் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படுத்தப்படும் என்று மின் சார சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அதிகரித்த வெப்பத்துடனான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தியாகும் நீர்வீழ்ச்சிகளின் நீர் வரத்து குறைவடைந்துள்ளது.

அதனால் கிடைக்கின்ற மின் உற்பத்தியைக் கொண்டு மின் வழங்கலை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைக்கு இலங்கை மின்சார சபை தள்ளப்பட்டுள்ளது. 24

## போர்க்குற்றங்கள் தொடர்பில் இந்திய அரசு வலியுறுத்தும்!

### நடவடிக்கை எடுப்போம் என்கிறது அ.தி.மு.க

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துவதற்கு இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

அதன் தேர்தல் விஞ்ஞாபனம் அறிவிக்கப்பட்டு ஒருவாரத்தின் பின்னர், புதிய இணைப்பு விஞ்ஞாபனம் ஒன்றை கட்சியின் இணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வமும், முதலமைச்சர் கே.பழனிச்சாமியும் வெளியிட்டுள்ளனர்.

இதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய 24

# புகையிரத சேவையில் பாரிய சுகாதாரச் சீர்கேடுகள் தமிழும் புறக்கணிப்பு என டக்ளஸ் குற்றச்சாட்டு

வடக்கிலுள்ள ரயில் நிலையங்கள் பலவும் மிகுந்த அசுத்த நிலையில் காணப்படுகின்றன. போதியளவு துப்புரவுத் தொழிலாளர்கள் இன்மையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. எனவே, இதற்கான ஆளணிகளை வடக்கு பகுதியிலிருந்தே நியமிப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகள் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதேநேரம், இந்த நாட்டின் ரயில் பாதைகளை எடுத்துக் கொண்டால், பெரும்பாலானவை தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளை ஊடறுத்தே செல்கின்றன. குறிப்பாக, கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தை பிரதானமாக எடுத்துக் கொண்டால், வடக்கு நோக்கி காங்கேசன்துறை வரை செல்கின்ற பாதை பதுளை, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அவிசாவளை, தலைமன்னார் வரை செல்கின்ற பாதைகள் அனைத்துமே தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளின் ஊடாகவே செல்கின்றன.

அந்தவகையில், ரயில் பயணங்களை அதிகமாகப் பயன்படுத்துகின்ற மக்களாகவும் தமிழ் பேச்கின்ற மக்கள் இருக்கின்றனர். எனவே, இந்த மக்களுக்குப் புரிகின்ற மொழியில் அறிவிப்புக்களை மேற்கொள்ள வேண்டியது புகையிரதத் திணைக்களத்தின பொறுப்பாகும்.

அதேநேரம், செல்ல வேண்டிய நேரம், செல்ல வேண்டிய ரயில், அது புறப்படுகின்ற நேரம், தாமதங்கள் ஏற்படுமா என்ற தகவல், சென்றடையக் கூடிய எதிர்பார்க்கப்படுகின்ற நேரம், தரித்து நிற்கக்கூடிய ரயில் நிலையங்கள், அவசரமான பொது அறிவிப்புகள் போன்ற அனைத்து தகவல்களையும் தங்களுக்குப் புரிகின்ற மொழியில் அறிந்து கொள்வதற்கான உரிமை இந்த நாட்டில் அனைத்துப் பயணிகளுக்கும் உண்டு.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 410 ரயில் நிலையங்கள் உள்ளதாகவும், இவற்றில் 177 இரயில் நிலையங்கள் பிரதான நிலையங்களாகும் என்றும், 162 உப ரயில் நிலையங்களும், 71 சாதாரண தரிப்பிடங்களுமாக இருக்கின்றன என்றும் தெரிய வருகின்றது. இந்த ரயில் நிலையங்களில் தமிழ் மொழி மூலமான அறிவிப்புகள் எத்தனை ரயில் நிலையங்களில் வழங்கப்படுகின்றன? என்ற கேள்வி எழுகின்றது. குறிப்பாக, தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளின் ஊடாகச் செல்கின்ற பாதைகளில் முக்கிய சந்திகளில் அமையப் பெற்றுள்ள, ராகம ரயில் நிலையம், பொல்கஹவெல, மாஹோ, மதவாச்சி, பேராதனை ரயில் நிலையங்களில்கூட தமிழ் மொழி மூலமான அறிவிப்புகள் இல்லை என்றே கூறப்படுகின்றது. இந்த நாட்டில் ஏனைய பல்வேறு துறைகளைப்போல், பொதுப் போக்குவரத்துச் சேவையிலும் இத்தகைய மொழிப் புறக்கணிப்புகள் இடம்பெறுகின்ற நாட்டிலேயே தேசிய நல்லிணக்கம் - பொறுப்பு கூறல் என்றெல்லாம் கதைக்கப்படுவது வேடிக்கையானதாகவே இருக்கின்றது. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர் உரிய அவதானங்களைச் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, பலாலி விமான நிலையத்தின் ஊடாக ஐரோப்பா வரையில் விமான சேவை நடத்தப்படவுள்ளதாக அண்மையில் ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்திருந்தன. அது எந்தளவிற்கு தற்போது சாத்தியமான நிலையில் இருக்கின்றது? என்பது பற்றியும், பலாலியிலிருந்து இந்தியாவிற்கான விமான சேவையினை ஏற்படுத்துவது தொடர்பான விடயம் குறித்த இன்றைய நிலைமைகள் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு,



துறைமுகங்கள் விமானப் போக்குவரத்து அமைச்சு தொடர்பில் கூறுகின்றபோது, குறிப்பாக காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவிற்கான கப்பல் போக்குவரத்து சேவையினை ஆரம்பிக்க வேண்டும் எனும் கோரிக்கையை நான் தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றேன்.

இது தொடர்பில் அண்மையில் அரச தரப்பு அவதானம் செலுத்தி வருவதாகவும் செய்திகள் வெளி வந்திருந்தன. அது குறித்த தெளிவுகளை அமைச்சர் சாகல ரத்னாயக்க வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்தார் (மு-3)

# தொடர் மின் தடை

## மகிந்த அதிருப்தி

(கம்பஹா)

நாட்டில் தொடர்ச்சியாக மின்தடை ஏற்படுத்தப்படுகின்றமை குறித்து எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நாட்டில் யுத்தீம் நடைபெற்றபோது கூட அந்த பிரதேசங்களுக்கு எமது அரசாங்கத்தினால் மின்சாரம் வழங்கப்பட்டது.

ஆனால் இன்றைய நிலைமையில் இந்த அரசாங்கத்திற்கு இதைக் கூட முறையாகச் செய்ய முடியவில்லை.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை அமைத்தபோது கடுமையாக விமர்சித்தனர். அந்த அனல்மின் நிலையம் தற்போது இல்லை என்றால் நாடு இருளடைந்திருக்கும்' என குறிப்பிட்டுள்ளார். (மு-3)

# 24 ஈழ அகதிகள்

## மீண்டும் தாயகம் வருகை

தமிழகத்திலிருந்து 24 ஈழ அகதிகள் மீண்டும நாடு திரும்பவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார, மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத்துறை வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வீ.சிவஞான்சோதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், 'இன்றும் நாளை மறுதினமும் நாடு திரும்பவுள்ளனர் என்றார். (மு-3)

# டைனமற் பயன்படுத்தி மீன்பிடி; தடுக்க முற்பட்ட அதிகாரிகளுடன் முரண்பாடு

## பொலிஸில் முறைப்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட கடற்றொழில் அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கமைய சூழலுக்கு விரோதமான மீன்களை உணர்ச்சியிழக்கச் செய்யும் டைனமற் வகை வெடி பொருள் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் கொண்டு வரப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய காட்டாஸ்பத்திரி இறங்குதுறைக்கு கடற்படை அலுவலகர்கள் மற்றும் பேசாலை பொலிஸ் அதிகாரிகளுடன் கள நடவடிக்கைக்காக சென்றபோது, ஒரு படகு காட்டாஸ்பத்திரியை அடுத்துள்ள வங்காலைப்பாடு எனும் இறங்குதுறையில் இறக்கப்படுவதாக அறிந்து அங்கு சென்றனர்.

அவ்விடத்தில் குழுமிய மீனவர்கள் குறித்த படகின் வெளியினை இயந்திரத்தை அகற்றி கொண்டு சென்றதுடன், குறித்த படகில் இருந்த மீன்களையும் கடலில் கொட்டிவிட்டு அதிகாரிகளுடன் அவர்களது கடமையை செய்யவிடாது இடையூறு செய்த தற்கமைய அங்கு வந்திருந்த பொலிஸாரினதும் கடற்படையினரதும் பாதுகாப்புடன் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக பேசாலைப் பொலிஸார் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளதாக அறியப்படுகிறது. (மு-3)


## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி, யாழ்.நகர் அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (8218)

**076 438 9429**



KOKUVIL HINDU COLLEGE O.S.A.

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

காலம் : 2019.04.21 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி

பிரேரணைகளை எதிர்வரும் 2019.04.06ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது மின்னஞ்சலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

தபால் முகவரி:-
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,**
**கொக்குவில்.**

மின்னஞ்சல் முகவரி:-
**khcosajf@gmail.com**

பொதுக்கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வி.தயாபரன்**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
(C-5882)


# துன்னாலை கோவிற் சந்தை விபத்தில் மீசாலை இளைஞர்கள் படுகாயம்

(கிழவிதோட்டம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் ஒருவர் பஸ் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர.

நேற்று திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் துன்னாலை கோவிற் சந்தை பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் வடக்கு மீசால்லையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியுடன் எதிரில் பயணித்த மோட்டார் சைக்கிளில் கோவிற்சந்தை பகுதியில் விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)

# யுவதியை கடத்திச் சென்றதாக

## வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு

வீதியால் சென்ற இளம் யுவதி ஒருவர் முகமூடிக் கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மதியம் யாழ்ப்பாணத்தில் இருந்து சகோதரனுடன் வல்வெட்டித்துறை நோக்கிசென்றுகொண்டிருந்த போது மோட்டார சைக்கிள்களில் முகமூடி அணிந்து வந்த ஆறு பேர் கொண்ட குழுவால் அவ் யுவதி கடத்திச் செல்லப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸில் அன்றைய தினம் முறையிடப்பட்டுள்ளது. (மு-60)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**


# வடக்கில் 17 ஆயிரத்து 443 வெடிபொருட்கள் மீட்பு!

வடக்கில் 764, 269 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 17,443 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் நேற்று தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான், அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி, முகமாலை ஆகிய பகுதிகளில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 மார்ச்மாதம 21ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கண்ணி வெடி அகற்றல் பணி இடம் பெற்றுள்ளது. (மு-3)

# கலப்பு நீதிமன்றக் கோரிக்கை மீண்டும் கறுப்பு ஜூலையைத் தோற்றுவிக்கும்!

## டிலான் பெரேரா எச்சரிக்கை

(பதுளை)

**கலப்பு நீதிமன்றக் கோரிக்கை, மீண்டுமொரு கறுப்பு ஜூலையைத் தோற்றுவிக்க வழிவகுக்குமென்று எச்சரித்துள்ள டிலான் பெரேரா எம்.பி, இலங்கைப் பிரஜை என்ற நிலைப்பாட்டிலிருந்து செயற்படுமாறு எம்.ஏ. சுமந்திரன் எம்.பிக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

பதுளை ஹாலி-எலயில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

இலங்கையில் யுத்தக்குற்றம் இடம்பெற்றதாகத் தெரிவித்து, வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருப்பதாகச் சுட்டிக்காட்டியதுடன், தான் ஓர் இலங்கையர் என்பதை, சுமந்திரன் மறந்துவிடக்கூடாதெனவும் தெரிவித்தார்.

இலங்கையில் நீதிப்பொறிமுறை ஒன்று உள்ளதால், அரசமைப்புக்கு அமைவாக கலப்பு நீதிமன்றத்தை உருவாக்க முடியாதெனத் தெரிவித்த அவர், ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர், அரசமைப்புப் பற்றி நன்கு அறிந்திருப்பார் என்றும் தெரிவித்தார்.



நீதித்துறையில் பேராசிரியராக இருக்கும் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எழுதிய நூல்களைக் கற்றே, சுமந்திரன் பரீட்சையில் சித்தியடைந்தார் என்றும், எமது நாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக, கலப்பு நீதிமன்றத்தை அமைக்க முடியாதென வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், மீண்டும் கலப்பு நீதிமன்றக் கோரிக்கையை முன்வைப்பது, இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பலியிடுவதாகவே அமையுமெனவும், அதனால் மீண்டுமொரு கறுப்பு ஜூலைக்கு வழிசமைக்க வேண்டாமென, சுமந்திரன் எம்.பியிடம் கேட்டுக்கொள்வதாகவும் டிலான் தெரிவித்தார். (இ-7)

## ஐ.நா.வே தமிழர்களுக்கு தீர்வை வழங்கும் எனக்கூறி அரசியல் செய்வதாக புகார்

(வாவிக்கரை)

இந்திய அரசாங்கம் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும் எனக் கூறியவர்கள், தற்போது ஐ.நாவே தமிழர்களுக்குத் தீர்வைத் தரும் எனக்கூறி அரசியல் செய்து வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"1978 ஆம் ஆண்டு தொடங்கி 2009 ஆம் ஆண்டுவரை இந்திய அரசின் பக்கம் மக்களை திசைதிருப்பி இந்திய அரசாங்கம் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூறிவந்தனர்.

2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐ.நா. எங்களைக் காப்பாற்றும், ஐ.நாவிடம் வலியுறுத்த எங்களுக்கு வாக்களியுங்கள் என்று தற்போதுவரை கூறுகின்றனர்.

ஆனால் ஐ.நாவில் சென்று பேசுவதும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பதும் யாரென்பதை மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

2015 ஆம் ஆண்டில் போர்க் குற்றங்களுக்கான நியாயத்தை பெற்றுக்கொடுப்போம் போன்ற தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி, மக்களிடம் வாக்குகளை பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆட்சியை தீர்மானிக்கின்ற நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது.

அதன் அடிப்படையில் ஆட்சியைத் தீர்மானித்து தற்போது அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும்.

இதன்மூலம் வரவு-செலவுத் திட்டத்தில் தமிழர்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்வதற்கும் பேரம் பேசுவதற்கும் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முடிவை எடுக்கப்போகின்றது.

தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக பேரம் பேசி வாக்களிக்கப்போகின்றதா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சி அரசை பாதுகாக்கப்போகின்றதா?" என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7)

## பத்து அடி தூரம் பாய்ந்த குள்ள மனிதனால் பரபரப்பு!

(குருநாகல்)

குருநாகலில் மீண்டும் குள்ள மனிதர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கலகெதர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் குள்ளமனிதர்கள் வந்து சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குள்ள மனிதர்களின் அட்டகாசம் காரணமாக பிரதேச மக்கள் தமது வீடுகளை விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவான மக்கள் வேறு இடங்களிலேயே தங்கியிருப்பதாகவும் இதனால் அவர்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட காயம்மா என்ற பெண்,


நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நான் பகல் உணவு பெற்றுக் கொள்ள சென்றேன். திடீரென வாசலில் இருந்த நாய் குரைக்க ஆரம்பித்தது. நாய் குரைக்கும் திசையை நோக்கிப் பார்க்கும் போது இரண்டரை உயரத்தில் மின்னும் கண்களுடன் குரங்கு போன்ற மிருகம் ஒன்று நாயுடன் மல்லுக்கட்டியது.

நான் கூச்சலிட ஆரம்பித்தவுடன் அந்த மிருகம் அங்கிருந்து ஓடிவிட்டது. நாய் பாரிய காயமடைந்த நிலையில் காணப்பட்டது. எனினும் குள்ள மனிதனை கண்டுபிடிக்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மற்றுமொரு வீட்டிற்கு இரவு நேரத்தில் சென்ற குள்ள மனிதன் கதவைத் தட்டியுள்ளான். அவனை அடித்து விரட்ட முற்பட்ட போது பத்து அடி தூரம் வரை பாய்ந்து சென்றுள்ளதாக லஹிரு என்ற இளைஞன் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை களமிறக்கவும்

### ரணிலிடம் பிறந்தநாள் பரிசு



(அம்பாந்தோட்டை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தனது 70 ஆவது பிறந்தநாளை கொண்டாடியிருந்த நிலையில் அவரிடம் பிறந்தநாள் பரிசாக அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கக்கோரி அவிஸ்ஸாவளை தும்மோதர பகுதி மக்கள் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிராமத்தின் குரல் அமைப்பால் குறித்த வழிபாட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, தனியார் ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவித்த அப்பகுதி பொதுமகன் ஒருவர் பிறந்தநாள் பரிசாக சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## எச்சந்தர்ப்பத்திலும் எமது நிலங்களை விட்டுக்கொடுக்க மாட்டோம் - மாவை

(கொழும்பு)

காங்கேசன்துறையில் அமைந்துள்ள ராஜபக்ஷ அரண்மனையை மையமாகக்கொண்டு மேலும் 62 ஏக்கர் நிலப்பரப்பை அபகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பிரதேசத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் நில அபகரிப்புக்கு இடமளிக்கமாட்டோம். அத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்.

அவ்வாறு இல்லாமல் எமது புனித பிரதேசங்கள் அமைந்திருக்கும் நகுலேஸ்வர, கீரிமலை பிரதேசங்களை எந்த விலை கொடுத்தேனும் நாங்கள் பாதுகாப்போம். எந்த சந்தர்ப்பத்திலும் எமது நிலங்களை விட்டுக்கொடுக்க இடமளிக்கமாட்டோம்' எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## வீதிப் போக்குவரத்து குற்றத்திற்கு விரைவில் புதிய அபராத முறைமை

வீதிப் போக்குவரத்து குற்றங்கள் 7 தொடர்பில் எதிர்காலத்தில் புதிய அபராத முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க நேற்றுப் பாராளுமன்றில் தெரிவித்தார்.



வரவு-செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை , துறைமுகம் மற்றும் கடற்படை செயற்பாடு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# கெயில் 'புயல் வேக' அரைச்சதம் முஜிபுர் 'சுழல் ஜாலம்'

## ராஜஸ்தானை வீழ்த்தியது பஞ்சாப்


அரைச்சதம் அடித்த பூரிப்பில் பஞ்சாப் அணியின் கிறிஸ் கெயில்

ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் துடுப்பாட்டம், பந்துவீச்சில் அசத்திய பஞ்சாப் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில், ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் நடக்கிறது. ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான் - பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரகானே, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**கெய்ல் அபாரம்**

பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல் (4) ஏமாற்றினார். கௌதம் 'சுழலில்' மயங்க் அகர்வால் (22) சிக்கினார். உனத்கட் வீசிய 12வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த கெய்ல், 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அபாரமாக ஆடிய இவர், 47 பந்துகளில் 79 ஓட்டங்கள் குவித்தார். நிக்கோலஸ் பூரன் (12) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய சர்பராஸ்கான், ஸ்ரோக்ஸ் வீசிய கடைசி ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது. சர்பராஸ் கான் (46), மன்தீப் சிங் (5) ஆட்டமிழக்காமல்இருந்தனர். ராஜஸ்தான் அணி சார்பில் ஸ்ரோக்ஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**பட்லர் அரைசதம்**

சவாலான இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் ரகானே (27) நல்ல ஆரம்பம் கொடுத்தார். கர்ரான் வீசிய 6வது ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய பட்லர், ராஜ்பூத் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி 29 பந்தில் அரைச்சதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய பட்லர் (69) ரன்அவுட் ஆனார்.

அடுத்து வந்த ஸ்ரீவ் ஸ்மித், கர்ரான் வீசிய 15வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். ஆட்டத்தின் 17வது ஓவரை வீசிய கர்ரான், ஸ்ரீவ் ஸ்மித் (20), சஞ்சு சாம்சன் (30) ஆகியோரை அவுட்டாக்கி திருப்பம் கொடுத்தார். முஜீப் வீசிய 18வது ஓவரில் ஸ்ரோக்ஸ் (6), திரிபாதி (1) 'பெவிலியன்' திரும்பினர். ஜோப்ரா ஆர்ச்சர் (2) 'ரன் அவுட்' ஆனார்.

கடைசி ஓவரில் ராஜஸ்தான் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ராஜ்பூத் வீசிய 20வது ஓவரின் முதலிரண்டு பந்தில் உனத்கட் (1), கௌதம் (3) ஆட்டமிழந்தனர். ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஸ்ரேயாஸ் கோபால் (1), குல்கர்னி (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


43 பந்துகளில் 69 ஓட்டங்களைக் குவித்த ராஜஸ்தானின் பட்லர்


**4,000 ஓட்டங்கள்**

பஞ்சாப் அணியின் கிறிஸ் கெய்ல், தனது 6ஆவது ஓட்டத்தை எடுத்த போது ஐ.பி.எல்., தொடரில் 4,000 ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம் இம்மைல் கல்லை எட்டிய 9வது வீரரானார். ஏற்கெனவே ரெய்னா (5004 ஓட்.), ஹோலி (4954), ரோகித் சர்மா (4507), காம்பிர் (4217), உத்தப்பா (4164), தவான் (4101), வோர்னர் (4099), தோனி (4016) ஆகியோர் எடுத்திருந்தனர்.

◆ கெய்ல், 112 இன்னிங்சில் இந்த இலக்கை அடைந்தார். இதன்மூலம் குறைந்த இன்னிங்சில் 4,000 ஓட்டங்களை எட்டிய வீரரானார். இதற்கு முன் ஹைதராபாத் அணியின் டேவிட் வோர்னர் 114 இன்னிங்சில் இந்த ஓட்டங்களை எடுத்திருந்தார்.

# தோனி 'சக்கரவியூகம்'... சிக்குவாரா ரிஷாப் பன்ட்!

## சென்னை - டில்லி இன்று மோதல்


பயிற்சியின்போது சென்னை அணித் தலைவர் தோனி

ஐ.பி.எல் தொடரில் இன்று நடக்கும் போட்டியில் சென்னை, டில்லி அணிகள் மோதுகின்றன.

இந்தியாவில் 12வது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில் இன்று டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடக்கும் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை அணி, பெயர் மாற்றத்துடன் களமிறங்கிய டில்லியை சந்திக்கிறது.

சென்னை அணியில் உள்ள 25 பேரில் 12 பேர் 30 வயதை கடந்தவர்கள் என்பதால் 'டாடி ஆர்மி' என்று அழைக்கின்றனர். துடுப்பாட்டத்தில் வோட்சன் ஏமாற்றினாலும், அம்பதி ராயுடு, கேதர் ஜாதவ் உள்ளிட்டோர் கடினமாக ஆடுகளத்தில் வெற்றியை எளிதாக்கினர். இன்றைய ஆடுகளமும் மந்தமாகத்தான் இருக்கும்என நம்பப்படுகிறது. இதற்கேற்ப பின்வரிசை வீரர்கள் ஜடேஜா, டுவைன் பிராவோ கைகொடுத்தால் நல்லது.

அனுபவ தோனி விரித்த வலையில் கடந்த போட்டியில் பெங்களூர் அணித் தலைவர் ஹோலி உள்ளிட்டோர் எளிதில் சிக்கினர். இன்று ரிஷாப் பன்ட் 'புயலை' கட்டுப்படுத்த சரியான வியூகம் அமைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**'சுழல்' பலம்**

பெங்களூர் அணிக்கு எதிராக சென்னை அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் ஹர்பஜன் சிங் (3), இம்ரான் தாகிர் (3), ஜடேஜா (2) கூட்டணி 8 விக்கெட்டுகளை கைப்பற்றியது. இந்த சிறப்பான 'போர்ம்' தொடர்ந்தால் இரண்டாவது வெற்றி எளிதாகும். வேகத்தில் கைகொடுக்க தீபக் சகார், டுவைன் பிராவோ உள்ளனர்.

டில்லி கேபிடல்ஸ் என்ற பெயரில் களமிறங்கிய முதல் போட்டியிலேயே மும்பையை சாய்த்த உற்சாகத்தில் உள்ளது டில்லி. இளம் அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர், பிரித்வி ஷா இன்று சொந்த மண்ணில் சுதாகரித்துக் கொள்ளலாம்.

'நடுத்தர வரிசையில் 'வரும் இங்ராம், ரிஷாப் பன்ட் துடுப்பாட்டத்தில் அச்சுறுத்தல் கொடுக்கின்றனர். முதல் போட்டியில் 7 சிக்சர்கள், 7 பவுண்டரிகள் என 27 பந்துகளில் 78 ஓட்டங்கள் குவித்தார் ரிஷாப். இது அணியின் வெற்றிக்கு உதவியது.

பந்துவீச்சில் இந்தியாவின் இஷாந்த் சர்மா, நியூசிலாந்தின் டிரன்ட் போல்ட் கூட்டணி ஜொலிக்கிறது. இவர்களுடன் கீமோ போல், ரபாடாவும் இணைவது கூடுதல் பலம். சுழலில் அக்சர் படேல் மட்டும் உதவ காத்திருக்கிறார். அனுபவம் வாய்ந்த 'சீனியர்கள்', சாதிக்க துடிக்கும் 'ஜூனியர்கள்' இடையிலான இப்போட்டி ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**யார் ஆதிக்கம்**

சென்னை, டில்லி அணிகள் மொத்தம் 18 போட்டிகளில் மோதின. இதில் சென்னை அணி 12ல் வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. 6 போட்டிகளில் டில்லி வென்றது.

மூ டில்லியில் இந்த அணிக்கு எதிராக மோதிய 6 போட்டிகளில் சென்னை 4ல் வென்றுள்ளது. டில்லி 2ல் மட்டும் வெற்றி பெற்றது.

# ஆஸி., வெற்றி


சதம் அடித்த ஆரோன் பின்ச் பந்தொன்றை பவுண்டரிக்கு விளாசியபோது...

பாகிஸ்தானுக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டியில் அணித் தலைவர் ஆரோன் பின்ச் சதம் கடந்து கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் மோதிய 2ஆவது ஒருநாள் போட்டி சார்ஜாவில் நடந்தது.

இது, இரு அணிகளுக்கு இடையிலான 100வது ஒருநாள் போட்டியாக அமைந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக் (0), ஷான் மசோத் (19) ஏமாற்றினர். ஹரிஸ் சோகைல் (34), உமர் அக்மல் (16) நிலைக்கவில்லை. அணித் தலைவர் சோயப் மலிக் (60) அரைசதமடித்தார். அபாரமாக ஆடிய மொஹமட் ரிஸ்வான் (115) சதம் கடந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களை எடுத்தது. இமாத் வசிம் (19), யாசிர் ஷா (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ரிச்சர்ட்சன், குல்டர் நைல் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**பின்ச் அசத்தல்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு உஸ்மான் கவாஜா, அணித் தலைவர் ஆரோன் பின்ச் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. கவாஜா அரைச்சதமடித்தார். மறுமுனையில் அசத்திய பின்ச், 13ஆவது ஒருநாள் சதம் கடந்தார். முதல் விக்கெட்டுக்காக 209 ஓட்டங்கள் சேர்த்த போது யாசிர் ஷா 'சுழலில்' கவாஜா (88) சிக்கினார். மக்ஸ்வெல் (19) சோபிக்கவில்லை.

47.5 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றி பெற்றது. பின்ச் (153), ஷோன் மார்ஷ் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# வர்த்தகரை கடத்திச் சென்று மாணிக்கக்கல் கொள்ளை

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியிலுள்ள விடுதியொன்றில் வர்த்தகர் ஒருவரிடமிருந்து மாணிக்கக்கல் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணத்தை இரண்டு பேர் கொள்ளையிட்டுள்ளனர்.

மாணிக்கக்கல்லை விற்பனை செய்வதற்காக குறித்த விடுதிக்கு வந்த வர்த்தகரிடம் அதனைக் கொள்வனவு செய்வது போன்று வந்த இரண்டு சந்தேக நபர்கள் அவரை அச்சுறுத்திக் கடத்திச் சென்றுள்ளனர்.

பின்னர் வர்த்தகருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து மாணிக்கக்கல் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி



அமரர். கணபதிப்பிள்ளை பத்மநாதன்

பத்மநாதன் பார்த்தீபன் அவர்களின் பாசமிகு தந்தை கணபதிப்பிள்ளை பத்மநாதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்,
வட்டுக்கோட்டை தொகுதி.

(சி-5875)







# இராசி பலன்

26.03.2019

பங்குனி 12, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 1.13 மணிவரை
அனுசம் முற்பகல் 12.03 மணிவரை
சுபநேரம் 10.45-12.15 மணிவரை
இராகுகாலம் 3.15-4.45 மணிவரை

கிரகநிலை: சூரி, செவ், ராகு, சுக் புத, சனி, குரு, கேது, சந்

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

வளவன்

**மீனம்:** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மேடம்:** எதிர்பாராத வகையில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, பண விரயங்கள் மேலோங்கும் நாள்.

**இடபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள், கடனை தீர்க்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆதரவு தருவர், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று ,நிறைவேறலாம், புண்ணிய காரியங்கவில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பலரது அன்புக்கும் பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** பயணத்தால் பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உறவினர் பகை அகலும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய பாதை புலப்படும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் காரியம் சாதிப்பீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்கொன்று நல்ல முடிவுக்கு வரலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்.



கரணவாய் முதலைக்குழி முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



ஆன்மீகச் சொற்பொழிவாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்தின் நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிவத்தமிழ் வித்தகர் அறக்கட்டளையைத் தொடக்கி வைத்தார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிவத்தமிழ் வித்தகம் என்ற நினைவு நூலை வெளியிட்டு வைத்ததோடு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சார்பாக அமரர் சிவ. மகாலிங்கத்திற்கு தேகாந்த நிலையில் திருமந்திரக் கலாநிதி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். ஆதீன முதல்வருடன் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, ஓய்வு பெற்ற பேராசிரியர் ம.வேதநாதன் ஆகியோர் இணைந்து இவ் விருதை வழங்கினர். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# சட்டவிரோத மணல் அகழ்வு; நால்வர் பொலிஸாரால் கைது



(சாவகச்சேரி)

தென்மராட்சி-தனங்கிளப்புப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் ஒன்று சாவகச்சேரி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது பிடிபட்டது. இதன் போது டிப்பர் வாகனத்தில் மணலை ஏற்றிக் கொண்டிருந்த ஜே.சி.பி(மணல் அகழும் இயந்திரம் ) ஒன்றினையும் பொலிஸார் பறிமுதல் செய்ததுடன்.டிப்பர் மற்றும் ஜே.சி.பி வாகன சாரதிகளையும் கைது செய்துள்ளனர். மேலும் நேற்று முன்தினம் நாவற்குழிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு சாரதிகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நான்கு சாரதிகளையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இக் கைது நடவடிக்கைகள் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே.கோனார தலைமையில் இடம்பெற்றன. (இ-30)

# முன்பள்ளியின் விளையாட்டு விழா

(கரணவாய்)

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் சமாதன தேவான் மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெற்றவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக ஜே/411 புலோலி தென் மேற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி. விமல்சின் நிமல்ராஜ், கௌரவ விருந்தினராக அருளானந்தன் அறக்கட்டளை நிறுவன ஸ்தாபகர்களும் ஆங்கில போதானாசிரியருமான அ.பிரதாபன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-60)

# ஓய்வூதிய நம்பிக்கை நிதியக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தலைவர் வி.சக்திவேல் தலைமையில்நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பிரதேச செயலக கணக்காளர் சூடாமணி அகிலன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி.பா.விஜயலட்சுமி யாழ். மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் பொ. கமலநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதில் தலைவராக வி.சக்திவேல்.செயலாளராக சு.கணேசலிங்கம்.பொருளாளராக எம்.ஏ. குணரட்னம், உப தலைவராக வி.மாணிக்கம்.உப செயலாளராக சு.நடராஜலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(இ-106)



நவிண்டில் நாவலன் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் தலைவர் சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக நவிண்டில் நாவலன் சனசமூக நிலையம் உப தலைவர் சி.கணபதிப்பிள்ளை மற்றும் பிரதேச செயலாளர் வினோராஜ், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கலாநிதி ச. பாலகுமார், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தருமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)



கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்தால் வறுமைக் கோட்டிலுள்ள பயனாளிக்கு கடந்த 19 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் உளுந்து அரைக்கும் இயந்திரம் வழங்கினார்.

# 100 அடி பள்ளத்தில் விழுந்த பேருந்து மூவர் உயிரிழப்பு; 53 பேர் படுகாயம்!





(வலப்பனை)

வலப்பனை பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை மூன்றாக உயர்வடைந்துள்ளது.

வலப்பனை, மஹாஊவா, ஹரிஸ்பத்துவ, பெரியமுடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில், தனியார் பேருந்து ஒன்று சுமார் 100 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 53 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அம்பாறையிலிருந்து, நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்ற தனியார் பேருந்து ஒன்றே, இவ்வாறு விபத்துக்குள்ளானதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பேருந்தில் 54 பேர் பயணித்ததாகவும் இவர்கள் அம்பாறை - கோணாகொல்ல பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் நேற்று மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள், நுவரெலியாவுக்குச் சென்று, வலப்பனை வீதி வழியாக அம்பாறைக்கு திரும்பிச்சென்ற போதே, இவ்விபத்துச் சம்பவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீண்டும் மைத்திரி-ரணில் கூட்டணி? சு.க.உறுப்பினர்களுக்கும் அமைச்சு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அமைச்சர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அமைச்சர்களாக நியமிக்கவுள்ள அக்கட்சி உறுப்பினர்களின் பெயர்களை, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியினர் சிலரை அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே சுதந் திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் அரசாங்கத்துக்கு ஆத ரவு அளித்து வருகின்ற னர்.

அவர்களில் விஜித் விஜயமுனி சொய்சா, பியசேன கமகே, லக்ஸ்மன் செனவிரத்ன, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரே அமைச்சர்களாக நியமிக்கப் பரிந்துரைக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அரசாங்கம் என்ற அடிப்படையில், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான புதிய பரந்துபட்ட கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் 15 பேர் இணையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக அவர்கள் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பின் பின்னர் தமது கட்சிக்கு வரு வார்கள் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ள நிலையில், தற்போது 4 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில் மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய அரசாங்கம் ஒன்று அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# தாமரைத் தடாகம் அருகே திடீரென தீப்பற்றிய ஆட்டோ



(கொழும்பு)

கொழும்பு - தாமரைத் தடாகம் அருகில் ஆட்டோ ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் தீயணைப்புப் பிரிவினரால் குறித்த தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது. (இ-7)

## போலி ஆவணம் தயாரித்த

# திஸ்ஸவுக்கு எதிரான வழக்கில் இரண்டு தரப்பும் சமரசமாம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக போலி ஆவணத்தை தயாரித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் இரு தரப்பினரும் சமரசமாக இணங்கியுள்ளதாக பிரதிவாதிமற்றும்முறைப் பாட்டாளரும் நேற்று நீதிமன்றுக்கு அறிவித் துள்ளனர்.

இந்த வழக்கை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த சமரசம் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அடுத்த மாதம் 4 ஆம் திகதி குறித்த வழக்கு மீண்டும் விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-7)

வலம்புரி
021 221 7603, 021 567 1532
விளம்பரத் தொடர்புகளுக்கு

மணமகள் தேவை

1985 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் உத்திரட்டாதி சூரி/ செவ் 6 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் படித்த பொறியிலாளருக்குஉரளவுபடித்தஅழகான பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8219)

T.P. NO- 076 661 2460

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

வேதாத்திரிய வேள்வி தினம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகான் உலக சமாதான தூதுவர் அருட்தந்தை யோகி ராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலக மக்கள் அனைவரும் உய்வதற்காக வான்காந்தத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு மகாசமாதி எய்தி பதின்மூன்று ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நிரல்

காலம்:- 28.03.2019 (வியாழக்கிழமை)
இடம்:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
நேரம்:- மாலை 5.00 மணி

* இறைவணக்கம் குருவணக்கம் மாணவிகள்
* தவம், அருள்நிதி சுகன்யா அவர்கள்
* வரவேற்புரை: அருள்நிதி சிவகாமி தவமணிதாசன்
* தலைமையுரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைமையுரையும் மகானுடனான சந்திப்பின் அனுபவங்கள்) (தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
* வேதாத்திரிய சிந்தனைகள்: அருள்நிதி குழந்தைவேல் அவர்கள் (தொண்டின் மேன்மையும் நன்மைகளும்)
  அருள்நிதி பாஸ்கரன் அவர்கள் (வேதாத்திரிய தத்துவங்கள்)
  அருள்நிதி நந்தகுமரன் அவர்கள் (எமது நல் வாழ்விற்கு வேதாத்திரி மகரிஷி காட்டுகின்ற வழிகள்)
* அனுபவ உரைகள்: அருள்நிதி குணசிங்கம், அருள்நிதி சாள்ஸ், அருள்நிதி தவமணிதாசன், அருள்நிதி தெய்வமாலினி
* சிறப்புரை: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல் அவர்கள் (சிந்தனையின் சிறப்பு)
* நன்றியுரை: அருள்நிதி சாந்தகுமாரி
* உலக நல்வாழ்த்து அருள்நிதி தனலக்சுமி

ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

*எளிய முறை உடற்பயிற்சிகள் எளிய முறை தியானப் பயிற்சிகள்
*காயகல்பப் பயிற்சி அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 30.03 2019 சனிக்கிழமை தொடக்கம் 05.04.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்: மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் (சி/5876)

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (தொ.இல. 021 222 2772)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 1<br>கி.பா:35 ¼<br>தகைமை/தொழில்:A/L, America<br>எதிர்பார்ப்பு:A/L,பட்டதாரி(உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/1413 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 1<br>கி.பா: 32 ¾<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில் விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3384 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 2<br>கி.பா: 18செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BCS பட்டதாரி, Database Administrator<br>எதிர்பார்ப்பு: A/L படித்தபெண், சைவபோசனம்<br>தொ.இ: B/1415 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 1<br>கி.பா: 14 ½உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/3393 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 3<br>கி.பா: 21 ¼<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L, பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் விரும்பத்தக்கது, விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/1429 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 11 ½<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.sc, IT Project Manager<br>எதிர்பார்ப்பு: London, Australiaமட்டும்<br>தொ.இ: G/3416 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 1<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Sc, அபிவிருத்தி உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:A/Lமேல் கல்வி தகைமைஅரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/1487 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 4<br>கி.பா: 44<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Sc IT, Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,உள்நாடு<br>தொ.இ: G/3432 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## சர்வதேச மகளிர் தினமும் சாதனை பெண்கள் கௌரவிப்பும்

(பனிக்கன்குளம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அண்மையில் மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்புவிருந்தினர்களாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. திருமதி பூங்கோதை தயாளசீலன். முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் பெண் முயற்சியாளர்களால் அமைக்கப்பட்ட சந்தையை மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் திறந்துவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு நகர பகுதியிலிருந்து மாவட்ட செயலகம் வரையான நடை பவனியும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்ட விழா மண்டபத்தில் பல்வேறு கலை நிகழ்வுகளும், சாதனைப் பெண்கள் கௌரவிப்பும்இடம்பெற்றன. (2-281)

# 3 ஆயிரத்து 304 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை

## வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்படி

(மல்லாவி )

வவுனிக்குள நீர்ப்பாசனத்திற்குட்பட்ட 2 ஆயிரத்து 203 பங்குதாரர்களும் நடப்பாண்டில் சிறுபோக நெற் செய்கையை 3 ஆயிரத்து 304.5 ஏக்கரில் மேற்கொள்ளவுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வருடம் கிடைக்கப் பெற்ற அதி கூடிய மழை வீழ்ச்சி காரணமாக கடந்த ஆண்டு கால போக நெற்செய்கையாக 6. ஆயிரத்து 60. ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ள நிலையில் நடப்பாண்டில் குளத்தில் நீர் மட்டமானது 22. அடி 06. அங்குலமாக காணப்படுகின்றது.

இதற்கமைய, வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற் செய்கை தொடர்பான சிறுபோக கூட்டத்தின் போது. வவுனிக் குளத்தின் இடதுகரை பிரதான நீர்ப்பாசன கால்வாயின் கீழ் உள்ள ஆயிரத்து 210 பங்குதாரர்களும் ஆயிரத்து 815. ஏக்கரிலும். மத்திய துருசு பிரதான கால்வாயின் கீழ் உள்ள 68. பங்குதாரர்களும் 102. ஏக்கரிலும், வலது கரை பிரதான கால்வாயின் கீழ் உள்ள 925. பங்குதாரர்களும் ஆயிரத்து 387.5. ஏக்கரிலுமாக மொத்தம் 2. ஆயிர த்து 203. பங்குதாரர்களும் 3. ஆயிரத்து 304.5. ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் போது. விவசாயிகளின் நலன் கருதி சேற்று விதைப்புக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு முதல் நீர் விநியோகமானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்து எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 20. ஆம் திகதி வரைக்கும் விநியோகிக்கப் படவுள்ளது.

இங்கு 03. மாதம் தொடக்கம் 03 அரை மாத காலம் கொண்ட நெல் இனங்களை விவசாயிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15, ஆம் திகதிக்கும் எதிர்வரும் மே மாதம் 10. ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் விதைப்பு செய்வதுடன் அறுவடைத் திகதி ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி கால்நடை உரிமையாளர்கள் தங்களின் கால்நடைகளை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 15, ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

விவசாயிகள் குளத்தின் நீரை வீண்விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்தி கூடிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என கூட்டத்தின் போது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக் களத்தின் புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனியா விபுலானந்தா கல்லூரியில் பேடன் பவல் சிலை திரை நீக்கம்




வவுனியா விபுலானந்தா கல்லூரியில் சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் சிலை நிர்மாணிக்கப்பட்டு திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் பொன். சிவநாதன் தலைமையில் இந்நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம் பெற்றது.

சாரண உதவிமாவட்ட ஆணையாளரும், வவுனியா நகரசபை உறுப்பினருமான சு.காண்டீபனின் நிதிப் பங்களிப்பில், பாடசாலையின் பழைய மாணவன் எஸ்.அமளிதரனால் வடிவமைக்கப்பட்ட பேடன் பவல் பிரபுவின் சிலையை சாரண மாவட்ட ஆணையாளர் ம.ச.பத்மநாதன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரித்தானியாவின் வடமேல் பகுதியில் இருந்து வருகை தந்த பெண் சாரணியர்கள், வவுனியா நகரசபை உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நந்தகுமார், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சி.கேசவன், அயல்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், சாரணியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தான். (2-250)




## மாபெரும் மருத்துவக் கண்காட்சி

(கிளிநொச்சி)

யாழ்.மருத்துவ பீடத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து யாழ். மருத்துவ பீடம் நடத்தும் மாபெரும் மருத்துவக் கண்காட்சி "YARL MEDEX II - 2019" என பிரமாண்டமாகப் பரிணமித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம் அறிவியல் நகர் கிளிநொச் சியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2. 3 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை வயது எல்லையின்றி சிறுபாலார் முதல் வயது முதிர்ந்தோர் வரை அனைவருக்கும் எளிதாய்ப் பயன்தரும் வகையில் நடைபெறவுள்ளது. (2)

## ஆலய திருவிழா இடம்பெறுவதற்கு முன்னர் வீதியை சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

### எழுத்துமூலம் அறிவிக்கும் பட்சத்தில் நடவடிக்கை

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத் திருவிழா மே மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் ஆலயத்திற்குச் செல்லும் வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

அவ்வீதியால் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குவதாகவும் அடிக்கடி விபத்தும் இடம்பெற்றுவருகின்றது.இதனால் அவ்வீதியை சீரமைத்துத் தருமாறும் ஆலயத்தின் பங்கு மக்கள் கோரியுள்ளனர்.

ஆலயத்திருவிழா கொடியேற்றம் ஆரம்பமாகி மாலை நவநாள்கள் திருப்பலி இடம்பெறும்.அந் நேரம் பல பகுதிகளிலிருந்து ஆலயத்திற்கு வருகை தரும் மக்க ளின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டும் இரவு வேளைகளில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் நலன் கருதியும் இவ்வீதியைச்சீரமைத்துத் தருமாறு மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து வேப்பங்குளம் வட்டாரத்தின் நகர சபை உறுப்பினர் அல்துல் பாரியிடம் தொடர்புகொண்டு வினவிய போது.

இவ்வீதி காப்பெற் வீதியாக அமைப்பதற்கு நகரசபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் திருவிழா இடம்பெறவுள்ளதால் குணடும் குழியுமாக காணப்படும் இடங்களை தற்காலிகமாக சீரமைக்க முடியும்.எனவே ஆலயத்தின் பங்குத்தந்தை இவ்விடயத்தினை நகரசபை தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கும் பட்சத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்வதாக மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

## கிளிநொச்சியில் நாய்க்கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகள், பொது வைத்தியசாலை வளாகம்,கிளிநொச்சி நகரம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் நாய்க்கடிக்கு இலக்காகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் பொது வைத்தியசாலை வளாகம் ஆகியவற்றில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் நாய்க்கடிக்கு இலக்காகுவோர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதுடன், விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இக்கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின்நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகம் மற்றும் மாவட்ட பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.

மேற்படி கட்டாக்காலி நாய்களால் நாய்க்கடிக்கு உள்ளாவோர் வருடாந்தம் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். (2)

# முல்லை.,கிளிநொச்சியில் 17 ஆயிரத்து 443 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றம்

(கண்டாவளை)

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் ஈடுபடும்) ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அம்பகாமம் தச்சடம்பன் ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் ஏழு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது சதுரமீற்றர் பரப்பளவில் (764,269 sqm) இருந்து 17 ஆயிரத்து 443 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற 'கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலைப் பகுதியில் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தில் மொத்தம் 118 பணியாளர்கள் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இதில் 11 பெண் பணியாளர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வடக்கிற்கு பனங்காய்; தெற்கிற்கு தேங்காய் தமிழ்க் கூட்டமைப்பு வீழ்த்திய இரண்டு காய்கள்

## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொறுப்புக்கூறல் என்பது இந்த நாட்டின் கடமை. தேசிய நல்லிணக்கத்தை நோக்கி செல்வதாகக் கூறும் உங்களது கடமை. உங்களைக் கொண்டு இதனை இப்போதல்ல, நல்லாட்சி என்ற அரசு ஆட்சிபீடமேறிய போதே செய்வித்திருக்க வேண்டியது.

உங்களை - அதாவது இந்த அரசை கொண்டு வந்தவர்கள் எனக்கூறிக் கொள்பவர்களும், கடந்த ஆட்சி மாற்றத்தின்போது இந்த ஆட்சியை மீளக் கொண்டு வருவதில் நாடாளுமன்றம் முதற்கொண்டு, உயர் நீதிமன்றம் வரையில் முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கடமையாகும். இதை யாரும் மறுக்க முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, வெகுசன ஊடகத்துறை பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்கள் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு இன்னும் இரண்டு வருட கால அவகாசம் வாங்கிக் கொடுப்பதில் இந்த அரசின் பின்னின்று முதன்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உழைத்துள்ளனர். அது அவர்களது ஊதியத்திற்கானதும், ஆடம்பர சலுகைகளுக்கானதுமான உழைப்பு. மறுபக்கத்தில், கால அவகாசம் வழங்கக்கூடாது என்றும் சர்வதேச நீதிப் பொறிமுறை வேண்டும் என்றும் அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்திலும் ஊடகங்களிலும் கத்திக் கத்தி உழைக்கின்றனர். இது, அடுத்த தேர்தலில் தமக்கான தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கான அவர்களது உழைப்பாகும்.

இதற்கு, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பார்கள். இந்தத் தமிழ்த் தேசியத் தரப்பினர் ஒரு படி மேலே போய், ஒரு கல்லில் தேங்காயும், பனங்காயும் வீழ்த்தி தென்பகுதிக்கும், வடக்கிற்கும் கொடுத்துவிட்டு, இரண்டு வருடங்களுக்கு இது போதும் சப்பிக் கொண்டிருங்கள் எனக் கொடுத்துவிட்டு, வடக்கிலும், தெற்கிலும், வெளிநாடுகளிலும் உல்லாசமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியம் என இவர்கள் கூறுகின்ற இவர்களது அரசியல் அகராதியில் ஐந்தே ஐந்து வார்த்தைகள்தான் உள்ளன. அதாவது தேர்தல் காலங்களில், இந்த அரசை - அல்லது அவர்கள் சொல்கின்ற அரசை 'நம்புகின்றோம்' என்ற வார்த்தை. பிறகு அந்த அரசுடன் சில காலம் ஒட்டி உறவாடிக் கொண்டே, தங்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொண்டே இடையில், இந்த அரசு 'ஏமாற்றுகிறது' என்றொரு அறிக்கையை விடுவார்கள்.

அதுவும், தீராத எமது மக்களது பிரச்சினைகள் சற்று உக்கிரமாகும்போது அப்படியொரு அறிக்கை வரும். பின்னர் சிறிது காலம் கழித்து 'அரசை நம்ப முடியாது' என்றொரு கதையை அவிழ்த்து விடுவார்கள். இறுதியாக, அடுத்த தேர்தல் நெருங்கும் போது அரசு ஏமாற்றிவிட்டது" என்றொரு அறிக்கையுடன், 'சர்வதேசம் தலையிட வேண்டும்' என்றொரு அறிவிப்பும் வரும்.

ஆக, நம்புகின்றோம், ஏமாற்றுகின்றது, நம்ப முடியாது, ஏமாற்றிவிட்டது, சர்வதேசம் தலையிட வேண்டும் என்கின்ற ஐந்து வார்த்தைகளை வைத்துக் கொண்டு தொடர்ந்து அரசியல் செய்து வருகின்ற இவர்களிடம் இருந்து எமது மக்கள் வேறெதனை எதிர்பார்க்க முடியும்? எனக் கேட்க விரும்புகின்றேன்.

கடந்த வருட இறுதியில் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெற்றது. அதன்போது இந்த தற்போதைய ஆட்சியை மீளக் கொண்டு வருவதில் இந்த நாட்டில் மிகக் கடுமையாக உழைத்த ஒரு தரப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதை எல்லோரும் அறிவார்கள். அடுத்த தரப்பினர் சர்வதேசத்தினர் என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

இத்தகையதொரு நிலையில், 'சர்வதேசம் தலையிட வேண்டும்! சர்வதேசம் தலையிட வேண்டும்!' என்றால், சர்வதேசம் யார் பக்கம் நிற்கப் போகிறது? என்ற கேள்வி எழுகின்றபோது, சர்வதேசம் நிச்சயமாக அரசு பக்கம் தான் நிற்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை. இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குத் தெரியாத விடயமல்ல. ஏனெனில் அவர்கள்தான் இந்த அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு இத்தகைய காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில், மக்கள் மத்தியில் போலி நாடகத்தை அரங்கேற்றி வருகின்றார்கள். அரசுடன் ஒருவர் உட்கார்ந்து கொண்டு, அரசுக்கு சார்பான அனைத்தையும் தயாரிக்கின்றார். அவரே ஜெனிவாவுக்குப் போய் தமிழர் தரப்பிலும் உட்காருகின்றார். அவரது அணியைச் சேர்ந்த இன்னொருவர், 'இலங்கை அரசுக்கு ஏன் இரண்டு வருட காலக்கெடு?' எனக் கேட்கிறார்.

இறுதியில் அவர்கள் எதிர்பார்த்தாற்போல் இரண்டு வருட காலக்கெடு கொடுக்கப்படுகிறது. எல்லோரும் சிரித்தபடி கைகொடுத்துவிட்டு, மீண்டும் ஜெனிவாவில் சந்திப்போமெனக் கூறிவிட்டு, தங்களது வருமானங்களைப் பார்க்கப் போய்விடுகிறார்கள். இதுதான் இவர்களது ஜெனிவா என்கின்ற நாடகம் என டக்ளஸ் எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்புரவு செய்யப்படாத காணிகளுக்கு விரைவில் தண்டப்பணம் அறவிடப்படும்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட தனியாருக்கு சொந்தமான துப்புரவு செய்யாத பற்றைக் காணிகளை சபை கையகப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக எதிர்வரும் மாதம் 22 ஆம் திகதிக்கு முன் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, மண்கும்பான், சரவணை, அல்லப்பிட்டி, அனலைதீவு ஆகிய பகுதிகளிலுள்ள தனியார் காணிகளை துப்புரவு செய்யுமாறும் அவ்வாறு துப்புரவு செய்யாவிட்டால் துப்பரவு செய்வதற்கு செலவழித்த பணத்தையும் தண்டப் பணத்தையும் சபைக்கு வழங்கிய பின்னரே காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பற்றைக் காணிகளில் கழிவுப் பொருட்களை வீசுவதால் மழைகாலங்களில் டெங்கு நோய் ஏற்படக்கூடிய சூழல் உருவாகுவதாகவும் பற்றைப் பகுதிகளில் வைத்து கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதுமான சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுகிறது.

ஆகவே தான் இத்தகைய செயற்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இத் திட்டம் வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (5-10)

# வில்பத்து விவகாரம் அரசிற்கு அபகீர்த்தி!

## ரணில் கூடுதல் கரிசனை

(அம்பாந்தோட்டை)

வில்பத்து காடழிப்பு என்று கூறி அமைச்சர் றிசாத் பதியூதீன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டிருந்த பிரதமர் ரணில் அங்கு வந்திருந்த அமைச்சர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

• அமைச்சர் றிசாத் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் மிகவும் மோசமான - இன ரீதியாக அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக நீதியமைச்சர் தலதா அத்துகோரள பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இது குறித்து உடனடி நடவடிக்கைகள் எடுப்பது சிறந்தது என்றும் தலதா அத்துகோரள இதன்போது பிரதமரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேசமயம் இங்கு கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் றிசாத் பதியூதீன் இந்த விடயத்தை ஆராய விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதே சிறந்தது என பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

இப்படியான பிரசாரங்கள் மூலம் அரசின் பெயருக்கும் அபகீர்த்தி ஏற்படும் என்பதால் உடனடியாக இதுகுறித்து கூடுதல் கரிசனை செலுத்துவதாக பிரதமர் உறுதியளித்துள்ளார். (இ-7)

# இலங்கை எமது பங்காளி

# வீடமைப்புத் திட்டங்களூடாக மகிழ்ச்சியை ஏற்படுத்த விருப்பம்

## இந்தியத் தூதுவர் தரண்ஜித் எதிர்பார்ப்பு

(கொத்மலை)


வீடமைப்புத் திட்டங்களை அமைப்பதன் ஊடாக மக்களின் மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்த விரும்புவதாக இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்திய அரசால், கொத்மலை எல்பொட தோட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "புதிய வீடமைப்பு கிராமத்திற்கு பகத் சிங் பெயரை வைத்துள்ளீர்கள். இதற்காக இந்திய அரசு பெருமைப்படுகின்றது.

இலங்கை இந்தியாவின் அண்டைய நாடு மட்டுமல்ல ஒரு விசேடமான பங்காளி நாடு. அயல் நாடுகளில் இந்தியாவால் கட்டப்படும் வீடுகளில் இலங்கையில் கட்டப்படும் வீடுகளே மானிய அடிப்படையிலான பெரிய திட்டமாகும்.




இந்தியா இலங்கையில் மொத்தமாக 65 ஆயிரம் வீடுகளை அமைக்கின்றது. இதற்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபாயை மானியமாக வழங்குகின்றது. இதில் 47 ஆயிரம் வீடுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச புகைப்பரிசோதனை நிலையம் கோண்டாவிலில் விரைவில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவிலில் வாகனக் காபன் (புகை) பரிசோதனை நிலையத்தின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். பொறியியல் பிரிவின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.தலைமைக்காரியாலயத்தில் சுமார் 70 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நவீன வசதிகளுடன் அமையப்பெறும் காபன் பரிசோதனை நிலையத்தின் கட்டுமானங்கள், ஆலோசனைகள் அனைத்தும் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தின் நேரடிக் கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றது.

முதற்கட்டமாக அரச, தனியார் துறைகளின் "டீசல்" வாகனங்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதோடு பிற்பட்ட காலங்களில் பெற்றோல் வாகனங்களையும் பரிசோதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே யாழ்.மக்களின் நேரச் சுமையைக்குறைத்து சிறந்த சேவையினை வழங்கவென அமைக்கப்பட்டு வருகின்ற வாகனக் காபன் பரிசோதனை நிலையத்தை சித்திரைப் புத்தாண்டில் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-10)

# ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்ய ஐ.தே.கவுக்கு ஒரு முறைமை உண்டு

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிப்பதற்கு ஒரு ஒழுங்கு முறை காணப்படுவதாகவும், ஏனைய கட்சிகளைப் போன்று ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வது தமக்கு ஒரு பிரச்சினையல்ல எனவும் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி புதிய ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானித்து நாட்டுக்கு அறிவிக்கும். இந்த முறைமை ஜே.ஆர். ஜெயவர்தனவின் காலம் முதல் இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவுக்கே ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. யாரை நியமிப்பது என்பதில் அக்கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் உருவாகியுள்ளன. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொருவரை பிரேரிக்கும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# முன்னாள் போராளிகளுக்கு உதவி





(சாவகச்சேரி)

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனின் 2018ஆம் ஆண்டு மாகாணசபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து முன்னாள் போராளிகள் 11 பேருக்கு துவிச்சக்கரவண்டிகள் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் அண்மையில் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கே.சயந்தன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் இ.சிவமங்கை, சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் பாலமயூரன்,சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் மயூரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-30)

# ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தீர்மானிக்கப்படுவார் என அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கன்னொருவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் அதன் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து ஜனாதிபதி வேட்பாளர் குறித்து தீர்மானிக்கப்படும் என அமைச்சர் ஹரிசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

கோத்தாவை சந்தித்த பின்

# தொண்டமான் இந்தியா பயணம்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள்



செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

மருத்துவ சிகிச்சையொன்றுக்காக ஆறுமுகன் தொண்டமான் எம்.பி, இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், அவர் இந்தியாவுக்கு செல்வதற்கு முன்பு, இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி வேட்பாளராகப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களமிறக்கப்பட்டால் அதற்கு இ.தொ.கா. ஆதரவளிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை களமிறக்க திட்டமிட்டிருப்பதாக அண்மையில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எட்டு மாத சிசுவுக்கு பாலூட்ட முன்வந்த ஒன்பது தாய்மார்

(மத்துகம)

சுமார் 10 மணித்தியாலங்களாக, பசியால் கதறிய சிசுவுக்கு ஒன்பது தாய்மார் பாலூட்டுவதற்கு முன்வந்த மனதை நெகிழ வைக்கும் சம்பவமொன்று நல்லதண்ணி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மத்துகமவைச் சேர்ந்த தாயொருவரின் எட்டுமாத சிசுவுக்கே, ஒன்பது தாய்மார்கள் இவ்வாறு, பாலூட்டுவதற்கு முன்வந்தனர். எனினும், நாவலப்பிட்டியைச் சேர்ந்த தாயொருவரே, அந்தச் சிசுவுக்கு பாலூட்டி பசியாற்றினார்.

இச் சம்பவம் தொடர்பில் நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்சிறி பெர்ணாந்து தெரிவிக்கையில்,

சிவனொளிபாதமலைக்குச் செல்வதற்காக, தனது எட்டுமாத சிசுவுடன் வருகைதந்திருந்த தாய், அதிகளவிலான குளிர் நிலவியதால், தாம் சுற்றுலா வந்திருந்த பேருந்திலேயே வைத்திருக்குமாறு, தன்னுடைய தாயாரிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு, மலைக்குச் சென்றுள்ளார். தாய், திரும்பி வருவதற்கு தாமதமானமையால், அந்தச் சிசு, பசியால் கதறியுள்ளது. என்ன செய்வதென்று தெரியாத, அந்த பேருந்திலிருந்து இன்னும் சிலர், அதுதொடர்பில் நல்லதண்ணி பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதையடுத்து, ஒலிபெருக்கியின் ஊடாக, விபரத்தை அறிவித்த பொலிஸார், தாய்ப் பாலூட்டும் தாய்மார்களின் உதவியைக் கோரிநின்றனர். அதையடுத்து, அந்தச் சிசுவுக்குப் பாலூட்டிப் பசியாற்றுவதற்காக, ஒன்பது தாய்மார்கள் முன்வந்துள்ளனர்.

எனினும், அதற்கான பாக்கியம், நாவலப்பிட்டி பகுதியை சேர்ந்த சுனித்தா என்பவருக்கே கிடைத்துள்ளது.

இந்நிலையில், விபரத்தை அறிந்து, மலையடிவாரத்துக்கு விரைந்து வந்த, சிசுவின் தாயிடம் விபரம் தெரிவிக்கப்பட்டு, குழந்தையும் ஒப்படைக்கப்பட்டது என்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-7)

# மூன்று முதியோருக்கு உதவி

(கரணவாய்)

மைக்கல் நேசக்கரங்களூடாக கோப்பாய் கிராமத்தைச் சேர்ந்த மூன்று முதியோர்களுக்கு வாழ்வாதார உதவியாக 20 ஆயிரம் ரூபாய் நேற்று வழங்கப்பட்டது. (இ-60)

# மகோன்னதப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி எள்ளங்குளம் நாச்சிமார் அம்மன் ஆலய பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாலாபிஷேகம், கற்பூரச்சட்டி என்பனவும் நடைபெற்றன.

1008 இற்கும் மேற்பட்ட அடியார்களால் பொங்கல் நடைபெற்றது. இப்பொங்கல் விழாவில் 3000 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். (5-60)

# றிசாத் மாட்டும் பிரச்சினை? சம்பிக்க காணி பிடிப்பது பிரச்சினையில்லையா?

## லஹிரு கேள்வி



(கொழும்ப)

அமைச்சர் றிசாத் பதியுதீன் வில்பத்துவில் காணி பிடிப்பது மாத்திரம் ஏன் பிரச்சினையாக தெரிவதாகவும், ஹேமாகமவில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க காணி பிடிப்பது மாத்திரம் பிரச்சினையாக தெரிவதில்லையெனவும் மாற்றத்துக்கான இளைஞர்கள் அமைப்பின் தலைவர் லஹிரு சிறிமான்ன கேள்வி எழுப்பினார்.

வில்பத்து வனப் பிரச்சினை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

தம்மைப் பொறுத்தவரை இரண்டும் தவறாகும். இனவாதக் கண் கொண்டு பார்ப்பதனால், வில்பத்து மாத்திரம் சிலருக்குப் பிரச்சினையாக தெரிகின்றது. இது தவறானது.

2030 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்து தேசிய பௌதீக வளத் திட்டம் என்ற ஒன்று கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்துடன் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன தொடர்புபட்டிருந்தன. இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு ஏற்ப, வில்பத்து வனத்தை வெட்டுவதற்கு வேண்டியிருந்தது. இதுதான் உண்மையான செய்தி.

இந்த வில்பத்தை அழிக்கும் திட்டத்தை கொண்டுவந்தது கடந்த ராஜபக்ஷ அரசாங்கமேயாகும் எனவும் லஹிரு தெரிவித்தார்.(இ-7)

# கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின்
# புதிய கிளை அலுவலகம் இன்று கிளிநொச்சியில் திறக்கப்படும்

(கிளிநொச்சி)

கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் வடக்கு மாகாணக் காரியாலயத்தின் புதிய கிளையானது இன்று செவ்வாய்க்கிழமை ஏ-9 வீதி கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையின் 22 மாவட்டங்களிலும் மாவட்ட காரியாலயங்களைக் கொண்டு செயற்படும் சங்கமானது, 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் வடக்கு மாகாணக் காரியாலயத்தை கிளிநொச்சியில் ஆரம்பித்தது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட காரியாலயம் தற்போது விஸ்தரிக்கப்பட்டு, புதிய இடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையிலுள்ள ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட தெற்காசியாவில் மிகப் பெரிய கூட்டுறச் சங்கமாகிய இச்சங்கமானது ஆசிரியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களுக்கான இலகு கடன்களை 5 வீதம் தொடக்கம் 8 வீதம் வரையிலும் வழங்கி வருகின்றது. உடனடிக் கடன் 8 வீதத்திலும், பொருட்கள் கடன் மற்றும் பிணைக்கடன் என்பன 6 வீதத்திலும், சொத்துக்கடன் 5 வீதத்திலும் வழங்கி வருகின்றது.

இத்துடன், ஆசிரியர்களின் அங்கத்தவர்களின் இறப்புக்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு, அங்கத்தவர்களின் பிள்ளைகளின் 5 ஆம் தர புலமைப் பரிசில் மற்றும் பல்கலைக்கழக கொடுப்பனவுகள் என்ற உதவித் திட்டங்களையும் வழங்கி வருகின்றது. மேலும், ஆசிரியர்கள் ஓய்வூதியத்தையும் வழங்கி வருகின்றது. (2)

# கணித வினாவிடை போட்டி
# தேசிய ரீதியில் முதலாமிடம்



(குருமன்காடு)

அல் ஹிக்மா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்ஜினால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கணித வினாவிடைப் போட்டியில் வவுனியா, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 11 மாணவன் முகமது சாஜகான் முகமது சகீர் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக் கத்தை வென்றுள்ளார்.

குறித்த மாணவனுக்குரிய தங்கப்பதக்கம், வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ்களை அல் இக்பால் மகா வித்தியாலய அதிபர் ஏ.கே. உபைத் நேற்று வழங்கி வைத்தார்.

மாணவர்களின்கணித அறிவு மட்டத்தை அதிகரிக்கும் நோக் கில் தேசிய மட்டத்தில் இப்போட்டி நடைபெற்றது.

இதில் முதல் இருபது இடங்களுக்குள் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த மூவர் தெரிவாகினர். தேசிய ரீதியில் முதலாமிடத்தை மாணவன் பெற்றுத் தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். (2-250)

# ஊரக எழுச்சி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் சிபார்சில் நடைபெற்று வரும் ஊரக எழுச்சி வேலைத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பிரதேச சபையின் தவிசாளர் அ. வேழமாலிகிதன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் மற்றும் ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு வேலைகளின் தரம் மற்றும் வீதிகளின் அகலம் ஒப்பந்ததாரர்களுக்கான நிபந்தனைகள் பற்றியும் ஆராயப்பட்டது. இது இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் எனவும் இத்திட்டத்திற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என தவிசாளர் கலந்துரையாடலில் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவ் வேலைத் திட்டத்திற்கு அப் பகுதிகளிலுள்ள மக்களும் பொது அமைப்புகளுமே பொறுப்பு. காரணம் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்ப உத்தியோகத்தரோ மேற்பார்வையிட வாராத வேளையிலும் நீங்களே பொறுப்பு. ஏனெனில் அது உங்களுக்கான வீதிகள் எனவும் கூறினார். (2)





# இரு தினங்கள் தெளிவூட்டல் கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை World Vision ஆகியன இணைந்து இன்றையதினம் முள்ளியவளையில் அமைந்துள்ள NAITA காரியாலயத்திலும் நாளை புதுக்குடியிருப்பு தேவிபுரம் 'அ'பகுதி பொதுநோக்கு மண்டபத்திலும் NVQ RPL முறைமை பற்றிய தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்றை காலை 9 மணியில் இருந்து முழுநேர நிகழ்வாக நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதில் World Vision கட்டட நிர்மாணப் பயனாளிகளை பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (2)

# இந்துக்கோவில் ஒன்றியம் உருவாக்கம்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோயில்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு வவுனியா பிரதேச இந்துக்கோயில் ஒன்றியம் நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.குகனேஸ்வர சர்மா தலைமையில் நடைபெற்றது.

இந்துக்கோயில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மத மாற்றம், அறநெறி வகுப்புகளின் செயற்பாடுகள், திருக்கேதீஸ்வர ஆலய வளைவு உடைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமை எனப் பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

இதனைத்தொடர்ந்து வவுனியா பிரதேசெயலக இந்து கோயில்களின் ஒன்றியத்திற்கான நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் மனோகணேசனின் வடக்கு மாகாண இணைப்பாளர் வி.விமலச்சந்திரன், கலாநிதி அகளங்கன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், மாவட்ட செயலக இந்துக்கலாசார உத்தியோகத்தர் சிவ. கஜேந்திரகுமார், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க செயலாளர் தே.அமலன் மற்றும் ஆலய பரிபாலன சபையினர்.இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகிகள், சமய ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர். (2-250)

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சுழற்சி முறையில் புதிய உறுப்பினர் நியமனம்

(குருமன்காடு)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சுழற்சி முறை அடிப்படையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய உறுப்பினர் ஒருவரை சுயேட்சைக் குழு-1 இல் போட்டியிட்ட வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் நியமித்துள்ளதாக அதன் தலைவரும் முன்னாள்வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.பி. நடராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் சுயேட்சைக் குழு-1 என மீன் சின்னத்தில் போட்டியிட்டு விகிதாசார அடிப்படையில் இரண்டு உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒருவர் என சுழற்சி முறையில் பதவியை வழங்க வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியம் தீர்மானித்திருந்தது.

அதன் அடிப்படையில் ஒரு வருட பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினராக பதவி வகித்த சிவக்கொழுந்து நடராஜா பதவி விலக, அவரது வெற்றிடத்திற்கு சுயேட்சைக் குழு-1 இல் சாளம்பைக்குளம் தொகுதியில் போட்டியிட்ட சிவபுரம் பகுதியைச் சேர்ந்த மணியம் நாகேந்திரராஜா வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றியத்தின் தலைவரும், முன்னாள் வடக்குமாகாண சபை உறுப்பினருமான எம்.பி.நடராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பே தற்போது அகத் தேசிய முற்போக்கு கழகம் என்ற கட்சியாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மனநலம் குன்றிய நபரை காணவில்லை; பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கண்டாவளை)



முல்லைத்தீவு பாண்டியன் குளம் பகுதியைச் சேர்ந்த மனநலம் குன்றிய 45 வயதுடைய ஒருவர் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணி முதல் காணாமல் போயிருப்பதாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாண்டியன்குளம் பகுதியில் அவரது பெற்றோருடன் வசித்து வந்த பாலசிங்கம் ஜெயபாவான் (ஜீவா) வயது 45 என்பவரே காணாமல்போயுள்ளார்.


இவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 077 112 7277 அல்லது 077 928 6264 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் உறவினர் கேட்டுள்ளனர். (2-315)



யாழ்.இந்திய தூதரகத்தின் நிதிப்பங்களிப்பில் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஏற்பாட்டில் முது தமிழ்ப்புலவர் ஔவையார் நினைவாக நடத்தப்படும் தமிழ் பண்பாட்டு விழா கல்லூரியின் பீடாதிபதி கதிரேசு சுவர்ணராஜா தலைமையில் நேற்று முன்தினம் கல்லூரியின் பலநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் போது ஞாபகார்த்தமாக மூன்று மரங்களும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# பாரதம்

## தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி; குற்றச்சாட்டில் 13 பேர் இனங்காணல்



(காஷ்மீர்)
காஷ்மீரில் தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கிய குற்றச்சாட்டில் ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் நிறுவனர் சையது சலாகுதீன் உட்பட 13 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக மத்திய அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரில் நடைபெறும் தீவிரவாத தாக்குதல்கள் அனைத்துக்கும் பாகிஸ்தான் நிதியுதவி வழங்கி வருவதாக தொடர்ச்சியாக குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

ஆகையால் இவ்விடயத்தில் உண்மையை கண்டறியும் பொருட்டு தேசிய புலனாய்வு முகாமை மற்றும் அமுலாக்கத்துறை அதிகாரிகள் அடிக்கடி சோதனை நடத்தி பல்வேறு ஆவணங்களைக் கைப்பற்றினர்.

மேலும் ஹிஸ்புல் முஜாகிதீன் நிறுவனர் சையது சலாகுதீன், பாகிஸ்தானில் செயற்படும் ஜமாத்-உத்-தவா தலைவர் ஹபீஸ் சயீது உள்ளிட்ட 13 பேர், உள்நாடு மற்றும் பாகிஸ்தான் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் நிதி திரட்டியுள்ளதாக அமுலாக்கத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் இந்த நிதியை, பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்துதல், மத்திய அரசுக்கு எதிரான பொய்யான தகவல்களை பரப்புதல் மற்றும் வன்முறையைத் தூண்டுதல் உள்ளிட்ட தேச விரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகையால் குறித்த 13 பேரின் சொத்துகள் அடையாளம் காணப்பட்டு அவற்றை பறிமுதல் செய்ய, அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (7)

## மாலியில் கி
## ஈவு இரக்கமி

### -135 பேர் உயிரிழப்பு-

(பமாகோ)
மாலியில் கிராம மக்கள் மீது தோகோன் இனத்தவர்கள் சற்றும் ஈவு இரக்கமின்றி நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் குழந்தைகள், கர்ப்பிணிகள் உட்பட 135 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில். வேட்டைக்காரர்களான தோகோன் பழங்குடியினருக்கும், புலானி விவசாயிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடிக்கிறது.

குறிப்பாக தோகோன் பழங்குடியினர் அவ்வ
போது புலானி மக்கள் மீது கொடூரத் தாக்குதலை
நடத்தி ஏராளமானவர்களை கொன்று குவித்
வருகின்றனர்.

இந்த நிலையில். மோப்டி பிராந்தியத்தி
புலானி மக்கள் அதிகம் வசிக்கும் ஒக்சாகாகோ
கிராமத்துக்குள் நேற்று தோகோன் இனத்தவர்க
பயங்கர ஆயுதங்களுடன் புகுந்தனர்.

அங்கு அவர்கள் ஒவ்வொரு வீடாக சென்
கண்ணில் பட்டவர்களையெல்லாம் துப்பாக்கியா
சுட்டு வீழ்த்தினர். கத்தி, அரிவாள் போன்
கூர்மையான ஆயுதங்களால் பலரை வெட்
சாய்த்தனர்.

சற்றும் ஈவு இரக்கமின்றி நடத்தப்பட்ட இ
கொடூர தாக்குதலில் குழந்தைகள், கர்ப்பிணிக

## செல்வந்தர்களுக்கே பா.ஜ.க.காவலாளி

### பிரியங்கா காந்தி சுட்டிக்காட்டு



நாட்டிலுள்ள செல்வந்தர்களுக்கே பா.ஜ.க.காவலாளியாக இருக்கின்றதே தவிர மக்களுக்கு இல்லையென காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க, மக்களின் காவலாளியென கூறிக்கொள்வது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பிரியங்கா காந்தி இதனை குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் கூறியுள்ளதாவது,

"உத்தரபிரதேசத்திலுள்ள கரும்பு விவசாயிகளுக்கு பல ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படாதமையினால் இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அக்குடும்பத்திலுள்ள குழந்தைகளும் போதிய உணவு, கல்வி உள்ளிட்ட அடிப்படை தேவைகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாமல் துன்புறுகின்றனர்.

மேலும் இவ்விடயத்தில் பா.ஜ.க. அரசு குறைந்தபட்சம் விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு கூட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஆனால் நாட்டிலுள்ள செல்வந்தர்களை மாத்திரம் பெரும் தொழிலதிபர்களாக மாற்றுவதற்கு உழைக்கின்றது" என பிரியங்கா காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (7)

## நியூசிலாந்து துப்பாக்கிச்சூடு; 29 ஆம் திகதி தேசிய துக்கதினம்

(வெலிங்டன்)
நியூசிலாந்து கிறிஸ்ட்சர்ச் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக எதிர்வரும் 29 ஆம் திகதி அந்நாட்டில் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கவுள்ளது.

நியூசிலாந்து பிரதமர் அலுவலகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இதனைத் தெரிவித்தது.

கிறிஸ்ட்சர்ச் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த மார்ச் 15 ஆம் திகதி வெள்ளையினத் துப்பாக்கிக்காரர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதல்களில் 50 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக அனுஷ்டிக்கப்படும் இந்த நாளில் நாட்டு மக்களும் உலக மக்களும் ஒன்றாக இணைந்து மரியாதை செலுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் குறிப்பிட்டுள்ளார். (7)

## இரு இந்து
## மதம் மாற்றி

### விசாரணைக்கு இம்ரா

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் 13 மற்றும் 15 வயதுடைய இ
சிறுமிகளை கடத்தி கட்டாய திருமணம் செய்த
தொடர்பாக விசாரணை நடத்துமாறு பிரதப
இம்ரான் கான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் அயல்நாடான பாகிஸ்தானி
சுமார் ஒரு கோடி இந்து மக்கள் வாழ்ந்து வருவத
கருதப்படுகிறது. ஆனால், அந்நாட்டின் பழை
மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 7
இலட்சம் இந்துக்கள் இருப்பதாக தெரிவிக்கப்ப
டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானின் சிந்து மாகாண
துக்குட்பட்ட கோட்கி மாவட்டத்தில் நேற்று முன்
னம் நடந்த ஹோலி கொண்டாட்டத்தின்போ
அப்பகுதியில் மிகவும் செல்வாக்கு படைத்த முக்
பிரமுகர்கள் இரு இந்து சிறுமிகளை கடத்
சென்றனர்.

அந்த சிறுமிகளை ஒரு முஸ்லிம் மதத்தலை

## தேரில் அமர்ந்து செல்வதை விட அந்தத் தேரை சுமப்பதே பெருமை

❖ கமல் தெரிவிப்பு
❖ தேர்தலில் போட்டியிடவில்லையெனவும் அறிவிப்பு

தேரில் அமர்ந்து செல்வதை விட, அந்தத் தேரை சுமப்பதே தனக்கு பெருமை என்பதால் இம்முறை மக்களவைத் தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் நீதி மய்யக்கட்சியின் பொதுக்கூட்டத்தின்போதே அவர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

தேரில் அமர்ந்து செல்வதை விட தேரை சுமப்பதே தனக்கு பெருமையான விடயம் என்பதாலேயே மக்களவைத் தேர்தலில் இம்முறை போட்டியிடவில்லையென அவர் அறிவித்துள்ளார்.

அதேநேரம், இந்நிகழ்வில் மக்கள் நீதி மய்யத்தின் வேட்பாளர் அறிமுகமும் இடம்பெற்றது.

மக்களவைத் தேர்தலில் இந்திய குடியரசு கட்சியுடன் கூட்டணி அமைத்து மக்கள் நீதி மய்யம் கட்சி போட்டியிடுகிறது. இதற்கிடையே மக்கள் நீதி மய்யம் சார்பில் வேட்பாளர்களின் நேர்காணல் கடந்த வாரம் சென்னையில் நடைபெற்றது.

கல்வித் தகுதி, தொகுதி மக்களுக்கு ஆற்றிய சேவைகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து முதல்கட்டமாக 21 வேட்பாளர்களின் பெயர்களை கமல்ஹாசன், சென்னையில் கடந்த 20 ஆம் திகதி வெளியிட்டார்.

இந்நிலையில், கமல் அவரது சொந்த ஊரான இராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிட வேண்டுமென மக்கள் எதிர்ப்பார்த்த நிலையில், தான் இம்முறை போட்டியிடவில்லையென்ற அறிவித்தலை அவர் விடுத்துள்ளார். (7)

## இந்தியாவின் குண்டு வீச்சிலிருந்து பயங்கரவாதிகளை பாக்.பாதுகாக்கிறது

### பெனாசிர் மகன் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)
இந்தியா குண்டுவீச்சில் இருந்து பயங்கரவாதிகளை இம்ரான் கான் அரசு பாதுகாக்கிறது என்று பெனாசிர் மகன் குற்றம் சாட்டியுள்ளார்.

புல்வாமா தாக்குதலை தொடர்ந்து சர்வதேச நாடுகளின் நெருக்கடியால் பல பயங்கரவாத அமைப்புகளை பாகிஸ்தான் அரசு தடை செய்துள்ளது.

இதுகுறித்து மறைந்த பெனாசிர் பூட்டோவின் மகனும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான பிலாவல் பூட்டோ நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

பயங்கரவாதிகளை கைது செய்து இருப்பதாக இம்ரான் கான் அரசு சொல்கிறது. இதை நம்ப நான் தயாராக இல்லை. பயங்கரவாதிகள் கைது செய்யப்படவில்லை. மாறாக இந்திய போர் விமானங்களின் குண்டு வீச்சில் இருந்து பாதுகாக்க அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பயங்கரவாதிகளின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். அது எந்த விதத்தில் முடக்கப்பட்டுள்ளது. முஷரப்பின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. ஆனால் நடந்தது என்ன? அவர் பணத்துக்காக வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார். பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு கொடுப்பது இந்தியாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு துரோகம் இழைப்பதாகும் எனத் தெரிவித்தார்.

முன்னதாக டுவிட்டரில் பிலாவல் பூட்டோ செய்தி வெளியிட்டார். அதில் இம்ரான் கானுக்கு சரமாரியாக கேள்வி விடுத்தார்.

தேர்தல் நேரத்தில் ஆதரவு அளித்த பயங்கரவாதிகளுக்கு இம்ரான்கான் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் ஆதரவாக செயற்படுகின்றனர். அவர்களை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற தயாரா? என சரமாரியாக கேள்வி எழுப்பி இருந்தார். (7)

## சூட
## 8 சி



(கார்டு
சூடான
பிரித்து எ
எதிர்பாரா
சிதறியது
பலியாகி
சூடா
நீடிப்பதா
உச்சத்தில்
இதன

# கிராம மக்கள் மீது மின்றித் தாக்குதல்

ு–

ர் அவ்வப்
தாக்குதலை
று குவித்து

ந்தியத்தில்
சாகாகோவ்
த்தவர்கள்

க சென்று
பாக்கியால்
போன்ற
ர வெட்டி

பட்ட இந்த
ப்பிணிகள்



உட்பட 135 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். தொடர்ந்து ஒட்டுமொத்த கிராமத்தையும் சூறையாடி விட்டு தோகோன் இனத்தவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். (7)

# சிரிய மண்ணிலிருந்து ஐ.எஸ்.பயங்கரவாதிகளை துடைத்தெறிந்து விட்டோம்

## ட்ரம்ப் பெருமிதம்

(வோஷிங்டன்)

சிரிய நாட்டு மண்ணில் இருந்து ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தை துடைத்தெறிந்து விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரிய நாட்டின் சில பகுதிகளை கடந்த 2014 ஆம் ஆண்டுவாக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கிருந்த வாறு உலகம் முழுவதும் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்குட்பட்ட ஆட்சியை நிறுவப்போவதாக பிரகடனப்படுத்தி இருந்தனர்.

கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் கைது செய்து சுட்டுக் கொன்றதுடன் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு இராணுவ வீரர்களின் தலைகளை வெட்டித் துண்டித்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் இருநாடுகளிலும் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் சுமார் 88 ஆயிரம் சதுர கிலோமீற்றர் அளவிலான நிலப்பரப்பை இந்த பயங்கரவாதிகள் கைப்பற்றி வைத்திருந்தனர். அரசுப்படைகள் தாக்குதல் நடத்த இங்கு வந்த போது பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி போரிட்டனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்க விமானப்படை மற்றும் தரைப்படையினரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான



இருந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளை முற்றிலுமாக ஒழித்து விட்டதாக அந்நாட்டு அரசு கடந்த 2017ஆம் ஆண்டில் அறிவித்தது.

இதேபோல், சிரியாவிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பிடியில் சிக்கியிருந்த கடைசி பகுதியான பாகுஸ் நகரை கைப்பற்ற சில மாதங்களாக சிரியா இராணுவத்துடன் இணைந்து அமெரிக்க வீரர்கள் நடத்திய உச்சக்கட்ட போர் நேற்று முடிவுக்கு வந்தது. அங்கிருந்த் பயங்கரவாதிகள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். அந்நகரின் மீது நேற்று முன்தினம் சிரியா நாட்டின் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த தாக்குதலுடன் சிரியா மண்ணில் இருந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளை துடைத்தெறிந்து விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். எனினும், நைஜீரியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ள நிலையில், 'அவர்களை முற்றிலுமாக தீர்த்துக்கட்டும் வரை அமெரிக்கா



போரில் ஈடுபட்டனர். அவர்களின் பிடியில் சிக்கியிருந்த பல பகுதிகளை அரசுப்படைகள் கைப்பற்றின.

ஈராக் மற்றும் சிரியாவில் அரசுப்படைகளின் ஆவேசமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத பயங்கரவாதிகளில் பலர் சரணடைந்தனர். உயிர் பயத்தில் சிலர் பாலைவனப் பகுதிகளுக்கு ஓட்டம் பிடித்தனர். ஈராக்கில்

கண்காணிப்புடன் விழிப்பாக இருக்கும்' எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நமது நேசநாடுகளுடன் இணைந்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலுமாக அழிக்கப்படும் வரை அமெரிக்கா போராட வேண்டுமானாலும் தேவைப்படும் இடங்களில் எல்லாம் தனது பங்களிப்பை தொடர்ந்து வழங்கும் என மேலும் தெரிவித்தார். (7)

# து சிறுமிகளைக் கடத்தி றி கட்டாயத் திருமணம்

## இம்ரான் கான் உத்தரவு

டைய இந்து
ம் செய்தது
ு பிரதமர்


ிஸ்தானில்
வருவதாக
ன் பழைய
சுமார் 75
ரிவிக்கப்பட்

மாகாணத்
ற்று முன்தி
தின்போது
த்த முக்கிய
கடத்திச்

த்தலைவர்

கட்டாய மதமாற்றம் செய்து இருநபர்களுக்கு திருமணம் செய்து வைத்த காணொளி காட்சிகள் அந்நாட்டு சமூக வலைத்தளங்களில் பரவலாகியது. இவ்விவகாரத்தால் கொதிப்படைந்த இந்து மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டனர். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தை அவர்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பான தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த சிறுமிகளை உடனடியாக மீட்க தேவையான நடவடிக்கை



களை எடுக்குமாறு பாகிஸ்தானில் உள்ள இந்திய தலைமை தூதருக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உத்தரவிட்டார்.

இதற்கிடையே, இவ்விவகாரம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி அவ்விரு சிறுமிகளையும் உடனடியாக மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சிந்து மாகாண அரசுக்கு பிரதமர் இம்ரான் கான் உத்தரவிட்டுள்ளதாக பாகிஸ்தான் தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் பவாத் சவுத்ரி நேற்று தெரிவித்துள்ளார்.

மேலும், இதுபோன்ற செயல்கள் தொடர்ந்து நடக்காமல் இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசு தீவிரம் காட்ட வேண்டும் என இம்ரான் கான் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். (7)

# சூடானில் குண்டு வெடித்ததில் 8 சிறுவர்கள் பரிதாபமாகப் பலி



(கார்டூம்)

சூடானில் வெடிகுண்டில் இருந்த தாமிரத்தை ரித்து எடுப்பதற்காக சிறுவர்கள் முயன்ற போது திர்பாராத வகையில் அந்த குண்டு வெடித்து தறியது. இதில் 8 சிறுவர்கள் பரிதாபமாக லியாகினர்.

சூடானில் கடும் பொருளாதார நெருக்கடி டிப்பதால் உணவுப் பொருட்களின் விலை ச்சத்தில் இருக்கிறது.

இதனால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த சிறுவர், சிறுமிகள் பணத்துக்காக ஆபத்தான வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் தலைநகர் கார்டூமில் உள்ள ஓம்டுர்மான் நகரில் இராணுவ பயிற்சி மையத்துக்கு அருகே வெடிகுண்டு ஒன்றை சிறுவர்கள் கண்டெடுத்தனர்.

பின்னர் அவர்கள் அந்த வெடிகுண்டில் இருந்த தாமிரத்தை பிரித்து எடுப்பதற்காக அதனை செயலிழக்கச் செய்ய முயன்றனர். அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் அந்த குண்டு வெடித்து சிதறியது. இதில் 8 சிறுவர்கள் பரிதாபமாக பலியாகினர். (7)

# லெபனானில் துப்பாக்கிச்சூடு இந்தியத் தொழிலாளி பலி!

## 3 பேர் படுகாயம்

(பெய்ரூட்)

லெபனான் நாட்டில் உள்ளூர்வாசி ஒருவர் நிகழ்த்திய துப்பாக்கி சூட்டில் இந்திய தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டார்.

லெபனான் நாட்டின் கிழக்கு பகுதியில் பெக்கா நகரம் உள்ளது. இங்குள்ள தொழிற்சாலை ஒன்றில் இந்தியாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

நேற்றுக் காலை இந்திய தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, உள்ளூர்வாசி ஒருவர் அவர்களிடம் தகராறில் ஈடுபட்டார்.

பின்னர் துப்பாக்கியால் அவர்களைச் சுட்டார். இதில் இந்திய தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டார்.

மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர். துப்பாக்கியால் சுட்டவர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். (7)

# பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் மத்திய வங்கி முன்னாள் பிரதி ஆளுநர் கைது

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பாக மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் சமரசிறி உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர் நேற்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (7)

# இந்தியாவின் உதவிகள் இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்தும்

## இராதாகிருஷ்ணன் நம்பிக்கை



(கொழும்பு)

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ள அநேக, உதவிகளை மீளச் செலுத்தத் தேவையில்லாதவை என்பதால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப இந்திய உதவிகள் துணையாக அமைவதாக விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் கொத்மலை எல்பொட தோட்டத்தில் 'அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், இந்திய அரசாங்கம் இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை செய்து வருகின்றது. அந்த வகையில் வீடமைப்பு திட்டம் அம்புலன்ஸ் சேவை என்பன மிகவும் குறிப்பிடக்கூடிய விடயங்களாகும். இது தவிர இன்னும் பல உதவிகளையும் இந்தியா செய்து வருகின்றது. இந்த உதவிகளில் அநேகமானவை மீள செலுத்தத் தேவையில்லாதவை. இதனால் இவ்வுதவிகள் பொருளாதாரத்திற்கு பாரிய ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது. ஆனால்ஏனைய நாடுகளின் உதவிகள் வட்டியுடன் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே இந்தியாவின் உதவிகள் மிகவும் வரவேற்கப்படுகின்றது.

நியூசிலாந்து நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மிகவும் துக்ககரமான சம்பவம் தொடர்பாக அந்த நாட்டினுடைய ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டன. அதனை நமது நாட்டு ஊடகங்களும் பின்பற்ற வேண்டும் என நான் கருதுகின்றேன்.

இலங்கையில் இருக்கின்ற ஒரு சில பெரும்பான்மை ஊடகங்கள் இன ரீதியில் முறுகல் நிலையை ஏற்படுத்தும் வகையிலேயே நடந்து கொள்கின்றன. இதனை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும். ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று சமூக வலைத்தளங்கள் ஊடகங்கள் மக்கள் மத்தியில் செய்திகளைக் கொண்டு செல்வதற்கு பெரும் பங்களிப்பு செய்கின்றன. எனவே அவையும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதை நான் பார்க்கின்றேன்.

எனவே ஊடகங்கள் செய்திகளை கொண்டு செல்கின்ற பொழுது மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இலங்கையின் எண்ணெய் அகழ்வுப் பணி திட்டத்தில் ஒத்துழைப்புடன் செயற்படுவோம்

## ஓமான் அமைச்சர் மொஹமட் உறுதி



(அம்பாந்தோட்டை)

இலங்கைக்கு வந்தபோது எதிர்பாராத விதமாக மக்கள் பலத்தை வரவேற்பை வழங்கியதாக ஓமான் நாட்டு அமைச்சர் மொஹமட் பின் ஹமத் அல் ரம்ஹி தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக பல்வேறுபட்ட சர்ச்சைகள் ஏற்பட்ட நிலையிலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதற்கு உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்காக ஓமானின் எண்ணெய்வள அபிவிருத்தி அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் எண்ணெய் அகழ்வு பணி செயற்றிட்டத்தில் ஒத்துழைப்புடன் செயற்படவுள்ளோம். அத்தோடு இந்த விடயத்தில் எமது நாட்டு மன்னரின் தலையீடு அதிகமாக காணப்படுகின்றது. மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த திட்டத்தினை இலங்கையில் ஆரம்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இது மூன்று ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு திட்டம் அல்ல. இது ஒரு நீண்ட கால திட்டமாகும்.

இந்த திட்டத்தை இலங்கைக்கு வழங்குவதற்காக நாம் கடின உழைப்பினை கொடுக்கவுள்ளோம். நாங்கள் இங்கு வந்தவுடன் எமக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. இதனை கண்டு நான் மிக வும் மகிழ்ச்சியடைகிறேன். இதனை நான் எதிர்பார்க்கவில்லை" என மேலும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் 3800 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இலங்கை ஓமானுடன் இணைந்து சுத்திகரிப்பு கைத்தொழிற்சாலை ஒன்றினை நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 36 நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டணமில்லா வருகை நுழைவிசைவு

(கொழும்பு)

எதிர்வரும் மே முதலாம் திகதி தொடக்கம் 36 நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு, வருகை நுழைவிசைவு, கட்டணமின்றி வழங்கப்படவுள்ளது.

பரீட்சார்த்தமாக, ஆறு மாதங்களுக்கு இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

நுழைவிசைவு கட்டணம் இன்றி இந்த நாடுகளின் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள். ஆறு மாதங்களுக்கு சோதனை அடிப்படையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதன் வெற்றியைப் பொறுத்து, இதனை நீடிப்பதா- இல்லையா என்று முடிவு செய்யப்படும்." என்றும் அவர் தெரிவித்தார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனைவியின் மனம்

உரோமாபுரியிலே 2500 வருடத்திற்கு முன் யாராவது கல்யாணம் பண்ணாமல் இருந்தால் அது மிகவும் 'ரிக்ஸ்'! ஆமாம்! அப்படியும் ஒரு நேரம் இருந்தது. ஏன் தெரியுமா? கல்யாணம் பண்ணாத பிரம்மச்சாரிகளுக்கு அப்ப கடுமையான அபராதம் போடுவார்களாம். அதனாலே அபராதமா? கல்யாணமா? இதில் எது சிறந்தது என முடிவு பண்ணி அதற்குத் தகுந்த மாதிரி நடந்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் எல்லாம் இதில் எது சிறந்தது என முடிவெடுப்பது கடினம். சில நேரத்தில் இது பரவாயில்லை என தோன்றும்! சில நேரத்தில் அது பரவாயில்லை என தோன்றும்! ஒரு நல்ல கணவன் எப்படியிருக்க வேண்டும் என பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்? என்ற ஆராய்ச்சியில் சிலர் ஈடுபடுகின்றனர்.

இத்தாலி, அமெரிக்கா, கனடா இந்த நாடுகளில் தனித்தனி யாக அந்தந்த நாட்டுப் பெண்களிடம் அபிப்பிராயம் கேட்டு அவற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

முதலில் 'மென்மை' இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? வெளியில் உறுதியும் வீரமும் உள்ளவனாக இருக்க வேண்டும். தன் மனைவியிடம் இனிமை கலந்த மென்மையானவனாக இருக்க வேண்டும். இதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சிலர் வீரத்தை வீட்டு வாசல் தாண்டி வெளியே வைத்திருப்பதில்லை! என்ன பண்ணுறது? எப்பாவது ஒரு சில தடவை 'நான் உன்னை மிகவும் விரும்புகின்றேன்' என்று சொல்ல வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

அடுத்தது மரியாதை. கணவன் முரட்டுத்தனமாகவோ, அலட்சிய மாகவோ, மரியாதை குறைவாகவோ நடப்பதை எந்த மனைவியும் விரும்புவதில்லை! அடுத்தது கருத்து அறிதல். மனைவியின் தேவையைத் தெரிந்து கொண்டு அவளது பிறந்தநாள் அன்று தேவைப்படுவதை பரிசாக கொடுத்துப் பாருங்கள் அதனுடைய மதிப்பே தனி! அவர்களது பெருந்தன்மையை புரிந்து கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடப்பது முக்கியம்.

அடுத்தது நீதி. கணவன் தான் தான் வீட்டுத் தலைவன் என்ற நினைப்பில் மனைவியின் சொந்த செலவுக்கும் வீட்டுச் செலவுக்கும் குறைவாகப் பணத்தைக் கொடுக்க கூடாது. ஏனென்றால் பல மனைவிமாருடைய மனக்குறை ''அவர் தன்னுடைய செலவுக்கு அதிக பணம் வைத்திருக்கிறார்'' என்பதுதான்.

அடுத்தது நன்றியுடைமை. பல மனைவிகள் சொல்வது என்ன தெரியுமா? நாங்கள் அனைவரும் சேர்ந்து வெளியே போகும் போது அவர் என்னை கேலி செய்கின்றார்! அவமானப்படுத்துகின்றார்! குழந்தைகளுக்கு முன்னால் கூட எங்களை குற்றம் கண்டுபிடிக்கிறார். இப்படி பல மனைவிகள் மனவேதனைப்படுகிறார்கள். கணவன் தன்னை எப்பொழுதும் காட்டிக் கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கையை மனைவிக்கு ஏற்படுத்த வேண்டும். அப்படி இருந்தால் தான் இல்லற வாழ்க்கை இன்பமாக இருக்கும்.


அடுத்து 'நேர்மை' மனைவிக்குத் தெரியாத 'ரகசியம்' சந்தேகத்தை ஏற்படுத்தும் அவர் பொய் சொல்கின்றார் என்ற சந்தேகம் வந்தவுடன் அவரது நடத்தையும் சந்தேகத்திற்குரியதாகிவிடும். அதனால் கணவன் உண்மையாகவும் – நேர்மையாகவும் நடக்க வேண்டியது அவசியம். இப்படி ஏழு விதமான ஆலோசனைகள் இந்த ஆராய்ச்சி மூலம் எமக்கு கிடைத்திருக்கிறது. ஒருவரை ஒருவர் செல்லமாக கூப்பிடுவது எப்படி தெரியுமா? இது ஊருக்கு ஊர் வித்தியாசப்படும். லிதுவேனியாவில் 'காட்டு மலரே' எனவும் திபெத்தில் 'சின்னஞ்சிறு பன்றியே' எனவும் செர்பியாவில் 'வெட்டுக் கிளியே' எனவும் கூப்பிடு வார்களாம். இதை சும்மா ஒரு தகவலுக்காக சொல்கின்றேன். இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவேண்டாம்.

இன்றைய தகவலுடைய நீதி என்னவென்றால் குடும்பம் சந்தோஷமாக இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்! சண்டை சச்சரவு இருக்கக் கூடாது என்பது தான்! "எங்கள் வீட்டில் முன்பெல்லாம் தினமும் சண்டை போட்டுக் கொண்டிருப்போம்! இப்ப ஒரு மாதமாக சண்டை இல்லை" எனப் பெருமையாகச் சொன்னார் ஒருவர். அது எப்படி என கேட்டேன்! "மனைவி பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிறாள்!" என்றார் அவர்!

# செயற்கை சிந்தனை இணையம்/ செயற்கை நரம்பணுப்பிணையம்

மனிதனின் மூளையும் நரம்பு மண்டலமும் ஒரு பிணையம் போலவே செயற்படுகின்றன. மனித நரம்பு மண்டலப் பிணையக் கருத்தமைவின் அடிப்படையில் கணனியில் ஒரு குறிப்பிட்ட பணிக்கான மென்பொருளைச் செயற்படுத்தக் கூடிய செயற்கை நுண்ணறிவு அமைப்பை செயற்கை சிந்தனை இணையம் என அழைக்கலாம்.


கணனி துணையுடன் நிகழும் பிற பணிகள் நிரலாளரொருவர் குறிப்பிட்டு எந்தெந்தச் சூழலில் என்னென்ன செய்ய வேண்டுமென நிரல் வழியாக வகுத்தது போலவே நிகழும். அவற்றிலிருந்து வேறுபட்டு செயற்கை நரம்பணுப்பிணையங்கள் துணையுடன் நிகழும் பணிகள் முற்காட்டுகளில் இருந்து கற்றுக் கொண்டதன் அடிப்படையில் நிகழும் தன்மையுடையவை. இதனால் இவை தன்னியக்கமாக பல பணிகளை ஏற்றுச் செய்யும் ஆற்றல் கொண்டவை.




மேற்குறிப்பிட்ட படம் ஒரு மறை நிலை அடுக்கைக் கொண்ட செயற்கை நரம்பணுப் பிணைய மாதிரி ஆகும்.

சிக்கலான பணிகளில் மேலேயுள்ளது போன்ற எளிய மாதிரி பொருந்தாது. வெறும் புள்ளியியல் எடைகளை வைத்துக் கூட்டுவதைத் தாண்டிய சில கணிதச் சார்புகளைக் கொண்டு எத்தகைய உள்ளீட்டு-வெளியீட்டு உறவையும் அண்மிக்கும் வரைவை கற்கலாமென நிறுவியுள்ளனர். இதன் வழியாக தக்க முற்காட்டுதல்களைத் தந்தால் எத்தகைய சிக்கலான வகைப்பாட்டுப் பணியையும் இப் பிணையங்களால் செய்யமுடிகிறது. செயற்கை நரம்பணுப் பிணையம் ஆனது மருத்துவம், பங்கு வியாபாரம், ரோபோ உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தற்போது பயன்படுத்தப்படுகின்றது. சில இடங்களில் மனிதர்களை விடவும் சிறப்பாக செயற்படுவதாக ஆய்வுக் கட்டுரைகள் தெரிவிக்கின்றன. இந்த கட்டுரையில் செயற்கை நரம்பணு பிணையத்தின் அடிப்படை கணித தத்துவத்தை எளிய முறையில் விளங்கிக் கொள்வோம்.

படத்தில் காட்டியவாறு $y=2x+3$ எனும் கோடு (1,2),(7,8)(8,11) இணையும் (3,16), (2,8), (5,14) இணையும் வேறு வேறு குழுமங்களாக பிரிக்கின்றது.



மேலுள்ள படத்தில் காட்டியவாறு $y=2x+3$ எனும்கோடு (1,2),(7,8)(8,11) இணையும் (3,16), (2,8), (5,14) இணையும் வேறு வேறு குழுமங்களாக பிரிக்கின்றது .f (x) ஆனது X இன் 0 ஐ விட கூடிய பெறுமானங்களை கொண்டிருக்கும் போது தனது பெறுமானம் 1 இனையும் மற்றும் படி -1 இனை கொள்ளும் ஆயின் $y-2x-3$ இன் பெறுமானத்தினை f(x) இல் பிரதியீடு செய்வதன் மூலம் மேற்குறிப்பிட்ட இரு குழக்களையும் இலகுவாக வேறு பிரிக்க முடியும். இதனது எளிய உருவமைப்பு பின்வருமாறு அமையும்.





இந்த பிணையத்தில் T கூட்டுத் தொகை இனையும் -2,1,-3 என்பன கன்ம் (weight) இனையும் குறிக்கும். மேல் உள்ளவாறான பிணையத்தில் நாம் தரப்பட்ட புள்ளிகளை பிரதியீடு செய்யும் போது விளைவானது கீழே தரப்பட்டவாறு அமையும்.

| x | y | T | f(x)(result) |
|---|---|---|---|
| 1 | 2 | -3 | -1 |
| 7 | 8 | -9 | -1 |
| 2 | 8 | 1 | 1 |
| 3 | 16 | 7 | 1 |
| 8 | 11 | -8 | -1 |
| 5 | 14 | 1 | 1 |

இங்கு -1 ஒரு குழுமத்தினையும் 1 மற்ற குழுமத்தினையும் தெளிவாக பிரிக்கிறது.


தற்போது கீழே தரப்பட்டவாறு நிழற்றப்பட்ட பகுதியில் உள்ள புள்ளிகளை ஒரு குழுவாகவும் ஏனையவற்றை இன்னொரு குழுவாகவும் பிரித்தறிய நாம் இரண்டு கோடுகளை பயன்படுத்த முடியும். புதிய கோட்டின் சமன்பாடு $y = -2x+16$ என்க. (மற்றைய கோடு $y=2x+3$ ஆகும்)



மேல் தரப்பட்டவாறு புள்ளிகளை வேறுபடுத்த கீழ்க்காணும் வலையமைப்பினை நாம் பயன்படுத்த முடியும். அதற்கான கணித்தல்களும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இறுதி பேஸ்ப்ட்ரோன் இற்கான அட்டவணை

இந்த கட்டமைபு (7,8), (8,11) ஆகிய இரு புள்ளிகளையும் ஒரு குழுவாகவும்




மேலதிக பேஸ்ப்ட்ரோன் இற் கான அட்டவணை

| x | y | T | f(x)(result) = P2 |
|---|---|---|---|
| 1 | 2 | -12 | -1 |
| 7 | 8 | 6 | 1 |
| 2 | 8 | -4 | -1 |
| 3 | 16 | 6 | 1 |
| 8 | 11 | 11 | 1 |
| 5 | 14 | 8 | 1 |

ஏனையவற்றை வேறு குழுவாகவும் சரியாக பிரிக்கிறது.

| P1 | P2 | T | F(x) |
|---|---|---|---|
| -1 | -1 | -1 | -1 |
| -1 | 1 | 1 | 1 |
| 1 | -1 | -5 | -1 |
| 1 | 1 | -3 | -1 |
| -1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | -3 | -1 |

செயற்கை நரம்பணுப்பிணையம் ஆனது மேல் குறிப்பிட்ட கணித தத்துவத்தின் அடிப்படையில் பிணைப்பு போல் கட்டமைப்பை போன்று அமைக்கப்பட்ட ஒரு மென்பொருள் உருவாக்கம் ஆகும். இத்தகைய செயற்கை நரம்பணுப் பிணையம் முடிவுகளையும் அதற்கான உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் குணகங்களை (இங்கு கோடுகளின் குணக்கங்கள் ) வழுவை குறைப்பதன் மூலம் கண்டறிந்து புதிய உள்ளிட்டுக்கான முடிவினை கண்டறியும்.

அ.கஜவதன்
மென்பொறியியலாளர்

# மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிமன்றக் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சங்கத்தின் தலைவர் க.நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது. இதில் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து வருகைதந்த சங்கத்தின் தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் சங்கத்தால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் முக்கியமானதாக மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழு எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு, அதனை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் நடவடிக்கைகள் நாடு முழுவதும் தற்போது இல்லாத நிலையில் மாகாணங்களை நிர்வகிக்கின்ற ஆளுநர்கள் மாகாணங்களின் இறைமைகள் பாதிக்கப்படும் விதத்தில் மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்க முயற்சிப்பது பொருத்தமான நடவடிக்கை அல்ல, எனவும் ஏற்கனவே மாகாணங்களில் உள்ள தேசிய பாடசாலைகள் பல்வேறு சீரழிவுகளுக்கு உட்பட்டுள்ளன என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளன.

உதாரணமாக வடபுலத்தில் உள்ள பிரப்ல பெண்கள் பாடசாலையில் பல பாடத்துறைகளுக்கான ஆசிரிய பற்றாக்குறை உள்ளது. இதனைச் சீர்செய்ய நாம் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அவை சீர் செய்யப் படவில்லை. இதைவிட மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களை அப்பாடசாலைக்கு விடுவித்து அப்பாடசாலையின் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்வைத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆகையினால் மாகாணங்களின் இறைமைகள் பாதுகாக்கப்படுவதோடு ஒரு பிரதேசத்தில் உள்ள மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்களை வேறாக்காது ஒரு அமைச்சின்கீழ் இயங்கச் செய்யும் நடைமுறையை ஒட்டுமொத்தமாக உருவாக்க வேண்டும்.

இதைவிட அதிபர் நியமனம், ஆசிரியர் நியமனம், ஆசிரியர் இடமாற்றம் என்பவற்றில் மாகாணக் கல்வி அமைச்சிற்கு தொடர்ந்தும் தலையிடியாக உள்ளவை இந்தத் தேசிய பாடசாலைகளின் நிர்வாகக் கட்டமைப்புகளும் அதன் நடைமுறைகளுமே என்பதனால் மாகாணங்களில் கல்வி நடவடிக்கைகள் ஒட்டு மொத்தமான ஒரே முறையில் கையாளப்படவேண்டும் என்பதற்காகவும், பிள்ளைகளிடத்தே, ஆசிரியர்களிடத்தே வேற்றுமைகளை ஏற்படுத்தாத விதத்திலும் மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் எத்தனங்களைக் கைவிட வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (இ-7)

# மின்னொளி முன்பள்ளி விளையாட்டு விழா



(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு மின்னொளி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

கைதடி மின்னொளி முன்பள்ளித் தலைவி உ.சிவரஞ்சனி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினராக கைதடி சீபன் பாஸ்கர், பயிற்சிப் பாடசாலையின் அதிபர் கு.டசீபன், ஜே/291 கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் நியூரிசா, சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கல்வி உத்தியோகத்தர் தி.விஜயதீபன், கைதடி குடும்ப முன்பள்ளிகளின் தலைவி திருமதி த.சுபத்திராதேவி, கைதடி தெற்கு சனசமூக நிலையத் தலைவர் சீ.சந்திரன், கைதடி தெற்கு மாதர் சங்கத் தலைவி திருமதி சி.குலமங்களம்,கைதடி தெற்கு இளைஞர் கழகத் தலைவர் ற.ரனீஸ்வரன், ஜே/291 கைதடி தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.துசீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-10)

## பட்ஜெட் வாக்கெடுப்பின் போது

# சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டைக்கொண்டே கூட்டணியின் அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படும்

## காமினி லொக்குகே கூறுகிறார்



(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான மூன்றாம் வாக்கெடுப்பின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி செயற்படும் விதத்தை வைத்தே பரந்துபட்ட கூட்டணி தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்படும். 2 ஆவது வாக்கெடுப்பின் போது சுதந்திரக் கட்சி செயற்பட்ட விதம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக அமைந்தது என பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பரந்துபட்ட ஒரு கூட்டணியை அமைக்க வேண்டுமாயின் சுதந்திரக் கட்சி , பொதுஜன பெரமுனவும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் கருத்திற்கு அமைய பொதுஜன பெரமுனவினர் சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராகவுள்ளோம்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் சுதந்திரக் கட்சியினர் வரவு - செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்தனர்.

இவ் வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்குவதாக குறிப்பிடப்படவில்லை என்று குறிப்பிட்டவர்கள் 2ஆம் வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களிக்காமல் வாக்களிப்பிலிருந்து விலகிக் கொண்டமையானது இருதரப்பிலும் சாதாரண இணக்கப்பாடு கூட இது வரையில் ஏற்படவில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாக்கெடுப்பு எதிர்வரும் மாதம் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இவ்வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சி முன்னெடுக்கும் தீர்மானங்களை வைத்தே கூட்டணி தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக செயற்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அல்லது வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டும். கூட்டணியமைத்தாலும், அமைக்காவிடினும் பொதுஜன பெரமுனவால் வெற்றி பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திறன் வகுப்பறை திறப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு மத்திய கல்லூரியின் புதிய தொழில்நுட்பக்கட்டடத்தின் வகுப்பறை ஒன்று திறன் வகுப்பறையாக (SMART Class Room) உருவாக்கப்பட்டு கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இவ்வகுப்பறைக்கான Interactive Board,Multi media Projector, Lap top computer என்பன சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலண்டனில் வசித்து வருபவருமான டாக்டர்.ஆர். நித்தியானந்தனால் அவரது தந்தை யாரது பெயரில் உருவாக்கப்பட்டு இலண்டன் நகரில் செயற்படும் Ratnam Foundation (Charity Organization) ஊடாக இலண்டனில் வசிக்கும் கிருபாகரனின் உறவினரான கிரிசாந்தனின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பறையானது நிதியுதவி வழங்கியவரது உறவினர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# சமூக சேவகி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான மாதர் அபிவிருத்தி சங்கத்தின் மகளிர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திருமதி லிகிதரதி சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூக சேவகி திருமதி அன்ரனி பிறேமராசா ஜெயந்தி. விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். ப.சதீஸ்வரன் தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி யோகேஸ்வரி சுரேஸ்குமார். கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் கு.பரமானந்தம். கொடிகாமம் வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.திருவேணி. சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி ம.சிந்துஜா. முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெகராசா. சுகாதாரப் பொதுப் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2014 ஆம் ஆண்டு மாதர் அபிவிருத்தி சங்கத்திற்கு ஒன்றே கால் பரப்பு காணி அன்பளிப்பு செய்திருந்தார். அந்த காணியில் மாதர் சங்கத்திற்கென பொது மண்டபம் அமைக்கப்பட்டு முதன் முதலாக 2019 ஆம் ஆண்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவகி கௌரவிக்கப்பட்டார். (5-29)

# காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு



(திருக்கோவில்)

காணாமலாக்கப்பட்டோருக்கான கிளை அலுவலகம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பாறையில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கோவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

மேலும், இந்தப் போராட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலர் கலந்துகொண்டனர்.

இறுதிக்கட்ட யுத்தத்திற்கு முன்னரும் யுத்தத்தின்போதும் யுத்தத்திற்கு பின்னரும் இலங்கை இராணுவத்தினரால் பலர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டனர்.

காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கு வடக்கு. கிழக்கு தெற்கு உட்பட நாட்டில் 8 பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்கு காணாமல்போனோர் பணியகம் திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய தெற்கில் மாத்தறை மாவட்டத்தை மையப்படுத்தி கடந்த 2ஆம் திகதி இந்த அலுவலகம் திறக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 110 |
| தக்காளி | 60 | 70 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 100 |
| கோவா | 80 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 50 | 30 | 40 |
| புடோல் | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 130 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 70 |
| பீற்றூட் | 60 | 100 | 30 |
| கறிமிளகாய் | 80 | 350 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 130 | 400 |
| போஞ்சி | 120 | — | 70 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை-1பிடி | 30 | 100 | 20 |
| தேசிக்காய் | 100 | | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 40 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 160 | — | — |
| முள்ளங்கி | 50 | — | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 40 | 15 |
| ஈரப்பலா | — | — | 100 |

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

204



“சேர்.ஆதர்.கோடன் (Sir Arthur Gordon) அரசாங்கத்தின் நலனை மட்டுமே எப்போதும் சிந்தித்தவரல்லாது, வட மாகாணத்தில் அவரது பிரஜைகளாகிய எமது நலனையிட்டுச் சிறிதும் சிந்தித்தவரல்ல. எனவே நாம் அவரை வரவேற்க வேண்டிய அவசியம் இல்லை. வெளிநாட்டுப் பொருட்களை வாங்க மறுக்கும்படி மக்களைத் தமிழ்த் தேசியவாதிகள் கேட்டுக் கொண்டதுடன் அவர்களை உள்ளூர் உற்பத்திப் பொருட் களை வாங்கும்படி ஊக்குவித்து ஆலோசனை வழங்கினர்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

சங்கம் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றும் வண்ணம், எவ்வளவுக்கு இயலுமோ அவ்வளவுக்கு மக்கள் முன்வந்து இப் பிரச்சினையையிட்டுத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பது அவசியமாகும்.

வடமாகாணச் சந்தைச் சட்டம் என்பதற்கு எதிராகவும் மக்கள் தமது பலத்த அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டு அரசாங்கத்திற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்து சாதனம் இதையிட்டுப் பின்வருமாறு கூறியது.

வேறெந்த மாகாணத்திலும் இல்லாமல் இந்த மாகாணத்தில் மட்டும் இச்சட்டத்தைக் கொண்டு வருவது நியாயமற்றது எனவும் இந்த விடயத்தில் ஆளுநர் ருவைனம் (Governor Twynam) செய்ததெல்லாம் கொடூரமும் அநீதியானதுமே என அரசாங்கத்தின் பிரஜைகள் வட மாகாணச் சந்தைச் சட்டம் பற்றிக் குரல் எழுப்புகின்றனர்.

தமது உரிமைகளுக்காகவும் நியாயத்திற்காகவும் போராட மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகத் திரண்டு எழுந்தனர் என்பது தெளிவாகின்றது.

அவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் தேசாதிபதியின் வருகையைப் பகிஷ்கரிக்கத் தம்மைத் தயார் செய்தனர். இந்து சாதனம் இதையிட்டு மீண்டும் கூறுவதாவது,

ஏற்கனவே இருக்கின்ற வரிகள் பெரும் சுமையெனவும் அவற்றை மேலும் அதிகரிக்கக் கூடாதென்றும் எமது மக்கள் அரசாங்கத்திடம் விண்ணப்பித்தனர். இதற்கு அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

அப்படிப்பட்டவருக்கா நாம் எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்? ஆறுநாட்களாக இருந்த இராஜகாரிய சேவையை ஒரு மாதமளவுக்கு அதிகரித்த தேசாதிபதிக்கா நாம் வரவேற்பளிக்க வேண்டும்? அவரது சொந்த நாடாகிய இங்கிலாந்தில் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் வேலையைக் குறைக்கும் படி போராட்டம் நடத்த அவர்களது முதலாளிகள் அக் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

எங்களுக்குப் புகையிரத சேவையைத் தராது, அதனைத் தொடர்ச்சியாகப் பிற்போட்டு வரும் இந்தத் தேசாதிபதியையா நாம் வரவேற்க வேண்டும்? தனது பிரஜைகளுக்கு நல்லதைச் செய்த தேசாதிபதியே மக்களால் வரவேற்கப்படுவதற்கு தகுதியானவர்.

சேர்.ஆதர்.கோடன் (Sir Arthur Gordon) அரசாங்கத்தின் நலனை மட்டுமே எப்போதும் சிந்தித்தவரல்லாது, வட் மாகாணத்தில் அவரது பிரஜைகளாகிய எமது நலனையிட்டுச் சிறிதும் சிந்தித்தவரல்ல. எனவே நாம் அவரை வரவேற்க வேண்டிய அவசியம் இல்லை.

வெளிநாட்டுப் பொருட்களை வாங்க மறுக்கும்படி மக்களைத் தமிழ்த் தேசியவாதிகள் கேட்டுக் கொண்டதுடன் அவர்களை உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்கும்படி ஊக்குவித்து ஆலோசனை வழங்கினர். தேசாபிமானம் என்ற தலைப்பில் இந்து ஓகனில் வெளியானதொரு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பொருட்களுக்கு வரியை அதிகரிக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்துங்கள். இறக்குமதி செய்யப்பட்ட அப் பொருட்களை வாங்க மறுங்கள்... தயவு செய்து உள்ளூர் உற்பத்திகளை வாங்குங்கள்.

இந்த வகையிலான மன வெளிப்பாடுகளும் கருத்துகளும் தமிழ் அடையாள உணர்வைப் பலப்படுத்துவதற்குப் பாரியளவில் பங்களித்து வெகுசனங்கள் மத்தியில் அரசியல் சிந்தனையை வளர்த்தன என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அத்துடன் மக்கள் உள்ளூர் அதிகாரியான முதலியார்களையும் விதானைமாரையும் வன்மையாகக் கண்டனஞ் செய்யவும் குற்றஞ்சாட்டவும் செய்தனர். உதாரணமாக இந்து ஓகன் ஊடாகத் தமிழ் மக்கள் தமது கசப்புணர்வைப் பின்வருமாறு வெளிப்படுத்தினர்.

ஆதரவற்ற மக்களிடமிருந்து வரி கறக்கும் ஆளுநர்களுக்கு மகத்தான வரவேற்பு வழங்கியும் அவர்கள் மேல் பன்னீர் தெளித்து பெரு விருந்தளித்து வரவேற்புரை வாசித்து அதன் வழி இங்குள்ள மக்கள் வசதியாக வாழ்கின்றனர் என்ற தோற்றத்தை உருவாக்கி இதனால் எந்த வித உதவியையும் அரசாங்கம் செய்யாமல் தடுத்து அநீதியான வரிகளைச் சுமத்தும் கையெழுத்திட்ட ஆணைகளைத் திரும்பத் திரும்ப அனுப்பி இங்குள் எமது பெருமக்கள் கொடிய குற்றத்தைச் செய்கின்றனர்.

இங்குள்ள பத்திரிகைகள் இந்த விடயத்தில் மௌனமாக தமக்கு எதுவும் தெரியாதது போல் நடித்து இங்கு அரசாங்க அதிகாரிகள் செய்யும் யாவற்றையும் புகழ்கின்றன.

இதனால் எமக்குக் கிடைக்கக் கூடிய நலன்கள் கிடையாது போகின்றன. இந்த நபர்கள் மட்டும் தமது தனிப்பட்ட சுயநலன்களை மறந்து இந்த நாட்டின் நலனுக்காக உழைப்பார்களேயானால் எமது நாடு மீட்சி பெறும் என எதிர்பார்க்க முடியும்.

இந்த உதாரணங்கள், தகவல்கள் யாவும் தமிழ் மக்கள் பிரித்தானியக் குடியேற்ற அரசாங்கத்திற்கும் அவர்களின் பாரபட்சத்திற்கும் அநீதிக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களால் கொடிய முறையில் நடத்தப்படுவதற்கும் எதிராகக்குரல் கொடுத்தனர் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

(தொடரும்)

# நான் தான் அமைச்சர் என்னை விட வேறு யாரும் வீடு கட்ட முடியாது

## பழனி திகாம்பரம் கூறுகிறார்

(கொத்மலை)

பாராளுமன்றத்தில் கறுப்பாகவும் கண் சிவந்த நிலையில் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவர் அமைச்சர் சஜித் பிரமேதாஸவிடம் சென்று 600 வீடுகளுக்கு கடன் விண்ணப்பங்களைக் கேட்டுள்ளார் என தெரிவித்த அமைச்சர் பழனி திகாம்பரம் இவ்வாறான விண்ணப்பங்கள் எனக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இராதாகிருஷ்ணன், திலகராஜ் ஆகியோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதை வைத்துக் கொண்டு தோட்டம் தோட்டமாகவும் வீடு, வீடாகவும் சென்று இந்த அரசு தனக்கு 600 வீடுகள் கொடுத்து விட்டது என்று தம்பட்டம் அடிக்கின்றது.

மலையகத்தில் வீடமைப்பு செய்வதற்கு நானே அமைச்சர். இந்த அதிகாரத்தை அரசாங்கம் எனக்குத்தான் கொடுத்துள்ளது. இந்த நிலையில் இவர்களை வீடு கட்ட நான் இடம் கொடுப்பேனா எனக் கேள்வியும் எழுப்பினார்.


இந்திய அரசாங்கத்தால் கொத்மலை எல்பொட தோட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மலையகத்தில் நான் நினைத்தால் மாத்திரமே வீடுகளைக் கட்டலாம். 2015 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலையகத்தில் வீடு அமைப்பதற்காக மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சை எனக்கு பாரம் கொடுத்துள்ளார்.

இப்போது ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் மக்கள் எங்களைத்தேடி வரும் இந்த நிலையில் நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தியை நிறுத்த பொய்யான தகவலாக 600 வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து சிலர் வலம் வருகின்றனர்.

இவ்வளவு நாள் செய்யாத அரசா இப்போது. இவர்களுக்கு செய்யப் போகின்றது என்ற கேள்வியும் எழுப்பினார். அதேநேரத்தில் இந்த வருடம் 3000 வீடுகள் எனக்கு கட்டியமைக்க வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால் யாரும் பயப்பட வேண்டாம். தாத்தா சொன்ன பொய் போதும், அப்பா சொன்ன பொய் போதும், இப்போது பேரன் பொய் சொல்லி, கொள்ளுப்பேரனும் பொய் சொல்ல வந்துவிட்



டார்.

இதற்கு இடம் கொடுக்க வேண்டாம். நான் இருக்கும் வரை எவருக்கும் பயப்படவும் வேண்டாம். நான் யாருக்கும் பயந்து போகும் ஆள் கிடையாது. உங்களுக்காக உங்களுக்குள்ள பிரச்சினையை எதிர்த்துப் போராடி உங்களுக்குத் துரோகம் செய்யும் தலைவர்களை விரட்டியடிக்கவும் தயங்க மாட்டேன்.

இந்த 1000 வீட்டில் ஒரு வீட்டைக்கூட இங்கு கட்டியமைக்க முடியாது. அரசு எனக்குத் தான் மலையகத்தில் வீடுகளை அமைக்க பொறுப்புக் கொடுத்துள்ளது.

அதிகார சபையும் எனக்கு கீழே தான் உள்ளது. நாமே வீடுகளைக் கட்டுவோம். நாம் இந்த அமைச்சை பெற்றே பின்பே மலையகத்தில் கிராமங்கள் உருவாகி வருகின்றது. வேறு யாராவது வந்திருந்தால் மலையகத்திற்கு மாடி வீடுகளே கிடைத்திருக்கும்.

கூட்டணி சார்பாக சேவைகளை செய்து வருகின்றோம். ஆதரவு தாருங்கள். மலையகத்தில் லயன்களை உடைத்து தனி வீடுகளை அமைத்து கிராமங்களை உருவாக்குவோம். இந்திய அரசு வீடு கட்டும் நிதியை நன்கொடையாகவே கொடுக்கின்றது.

ஒரு வீட்டிற்கு 10 இலட்சம் ரூபா செலவு செய்யப்படுகின்றது. 16 ஆயிரம் வீடுகளை இந்திய அரசு வழங்கியுள்ளது. 4000 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டி முடியும் தறுவாயில் உள்ளது. அடுத்த ஜூன், ஜூலையில் 10 ஆயிரம் வீடுகளுக்கான அடிக்கல் நாட்ட உள்ளோம்.

லயன் வீடுகளை உடைத்து தனி வீடுகளை அமைப்பது எமது அமைச்சும் அரசுக்கு முன்வைத்துள்ள கோரிக்கையாகவும் இருக்கின்றது. அந்த வகையில் இந்திய அரசுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன், தோட்டப் பகுதிகளுக்கு தனி முகவரி தந்த இலங்கை அரசுக்கும் பிரதமருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# கழிவகற்றல் கூட ஒழுங்காக இல்லை

## யாழில் தயாசிறி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினர் கழிவகற்றலைக் கூட ஒழுங்காகச் செய்யமுடியாதவர்களாகக் காணப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு செயற்றிட்ட மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பல ஆண்டு காலமாக மாகாணசபை இல்லாமல் இருந்தது. அதன் பின்னர் மாகாண சபையை அமைக்க வழிவகுத்தோம்.

ஆனால் அந்த மாகாணசபையால் கிராம மட்டத்தில் ஏதும் நன்மை ஏற்பட்டதா? கழிவகற்றலைக் கூட ஒழுங்காகச் செய்ய இயலாத யாழ்.மாநகரசபையின் தலைவர்கள் வெளிநாட்டில் தான் இருப்பதாகவும் தயாசிறி தெரிவித்தார்.

யாழ்.வந்த தயாசிறி கூட்டமைப்பினர் மற்றும் ஐ.தே.கட்சியினரை கடுமையாகச் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1679


### ராணி

**பெண்தானே என்று தாழ்வாக நினைக்காதே... அவள் அங்கீகரிக்காவிட்டால் உன்னை ஆண்மகன் என்று உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது**



### கபில்

**நேரம் என்பது சட்டைப்பையில் உள்ள பணம் மாதிரி அதை இழக்கக்கூடாது. பத்திரமாகச் செலவு செய்ய வேண்டும்- பெஞ்சமின் பிராங்கிளின்**



### குமார்

**என்னை மதிக்காதவர்களை நானும் மதிப்பதில்லை... அதற்கு நீங்கள் வைக்கும் பெயர் தலைக்கணம் என்றால் நான் வைக்கும் பெயர் தன்மானம்**



### இனியன்

**உள்ளத்தில் நேர்மையும் தைரியமும் இருந்தால் நடக்கும் பாதையும் நேரானதாகவே இருக்கும்**



### சுபாசினி

**மகிழ்ச்சியை சேமித்து வைப்பதில் எந்தப் பயனும் இல்லை, அவ்வப்போது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்**



### கனிமொழி

**எல்லா வசதிகளும் வாய்ப்பும் வந்த பிறகு மனம் தேடுவது பழைய சந்தோசமான நாட்களையே**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

13

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**காணிக்கு உரிமை கோருபவர்கள் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரின் தீர்மானத்தில் அதிருப்தி அடைந்திருப்பின், அவர்கள் தங்களது வழக்குகளை மாவட்ட நீதிமன்றத்தின் சட்ட வரம்புக்கு பாரப்படுத்த காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரைக் கோரலாம்.**

காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பொருத்தமான சகல ஆவணங்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அவர்களிடம் தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்று மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய சமர்ப்பிப்பார்.

**வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்திய பின் நீதிமன்றம் காணியின் ஆட்சியுடைமை உடைமையுரிமை மீது தீர்மானம் ஒன் றிற்கு வரும் வரை காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பிரிவு 17 அளிப்புக் கடிதத்தினை வழங்குவதிலிருந்து விலகியிருப்பார்.**

வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியபின் நீதி மன்றம் காணியின் ஆட்சியுடமை உடைமையுரிமை மீது தீர்மானம் ஒன்றிற்கு வரும் வரை காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பிரிவு 17 அளிப்புக் கடிதத்தினை வழங்குவதிலிருந்து விலகியிருப்பார்.

காணிக்கு உரிமை கோருபவர்கள் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரின் தீர்மானத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பங்களில் அவர் காணி அமைந்துள்ள மாவட்ட விலைமதிப்பீட்டாளரிடம் கையகப்படுத்திக் கொள்ளப்படவுள்ள காணிக்கான விலைமதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு வேண்டுவர்.

மாவட்ட விலை மதிப்பீட்டாளர் காணியைப் பார்வையிட்டு அதிலுள்ள சகல கட்டடங்களின் விபரங் கள் (உதாரணம்: சதுர அடி விஸ்தீரணம், பயன்படுத்தப்பட்ட கட்டுமானத் திரவிய ங்கள், கட்டடத்தின் நிலைமை) மரங்களின் வகை (எண்ணிக்கை,வயது மற்றும் விட்டம்) மற்றும் காணியிலுள்ள வேளாண்மை ஆகியவற்றை உள்ளடக்கி 'நிலை அறிக்கை' ஒன்றைத் தயாரிப்பார்.

நில அளவை வரைபடத்தில் வழங்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு காணியின் விஸ்தீரணம் நிலை அறிக்கையில் பதியப்படுகின்றது.

இந்நிலை அறிக்கையின் அடிப்படையில் காணியின் விலைமதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படுகிறது. விலைமதிப்பீட்டிற்கு பின்பற்ற வேண்டிய முறை சட்டத்தின் பிரிவு 45, 46, 47 மற்றும் 48 மற்றும் 2008 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு ஒழுங்கு விதிகளின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

➢உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு காணி சுவீகரிப்புச் செய்யும்போது வழங்கப்படும் இழப்பீடுகள்.

இக்கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது வழங்கப்படும் இழப்பீடுகள் "2008 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு ஒழுங்குவிதிகள்" இன் கீழ் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இங்கு இழப்பீடு என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. "நபரொருவருக்கு வழங்கப்படும் இழப்பீடு என்பது அவரது காணி கையகப்படுத்தலுக்கு/சுவீகரிப்புக்கு முன்பு அவர் கொண்டிருந்த அதே சமூகப் பொருளாதார நிலையில் வைத்திருப்பதற்குத் தேவையான பணத்தொகை மற்றும் பாதிக்கப்பட்ட நபருக்கு உரித்துடைய கருத்திட்டமொன்றினால் பாதிக்கப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட்ட ஆதனமொன்று, வளம் அல்லது வருமான மூலம் என்பவற்றைப் பிரதியிடுவதற்குப் பணமாக அல்லது அதன் வகையாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு ஆகும்"

**➢சட்டத்தின் பிரிவுகள் 17, 22 மற்றும் 23 இழப்பீட்டு அளிப்பு, இழப்பீடு வழங்கல் மற்றும் மேன்**

**சட்டத்தின் பிரிவுகள் 17, 22 மற்றும் 23 இழப்பீட்டு அளிப்பு, இழப்பீடு வழங்கல் மற்றும் இழப்பீடு சம்பந்தமான மேன் முறையீடு பற்றி கூறுகின்றது.**

**முறையீட்டு செயல்முறை**

காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் விலைமதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் காணி உரிமையாளர்களை அவரது அலுவலகத்திற்கு அழைத்து அவர்களுக்கு உரித்துடைய இழப்பீட்டினைப் பிரகடனப்படுத்துவார். உரிமையாளர்கள் வழங்கப்பட்ட இழப்பீட்டில் திருப்தியடையாதவிடத்து அவர்கள் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரை அவர்களது விலைமதிப்பீட்டு விலைமதிப்பினை பிரதான/தலைமை விலைமதிப்பீட்டாளருக்கு மேலதிக மீளாய்வுக்கு பாரப்படுத்துமாறு கோர முடியும்.

காணி உரிமையாளர்களுக்கும் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தருக்கும் இடையில் இறுதி உடன்பாடொன்று எட்டப்பட்டதன் பின்னர் அல்லது பிரிவு 10(1)(ஆ) இன் கீழ் பாரப்படுத்தப்பட்ட வழக்குகள் மீது நீதி மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், பிரிவுகள் 22 மற்றும் 23 இன் ஏற்பாடுகளின் கீழ் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பிரிவு 17 அளிப்புக் கடிதத்தை வழங்குவர்.

இவ் அளிப்புக் கடிதம் காணி அல்லது ஆட்சி உடைமையின் இழப்பீட்டிற்குத் தகுதியான நபர்களின் விபரங்கள் தனிப்பட்ட உரிமையாளர்களின் இழப்பீட்டு உரித்துரிமைகளின் பங்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஆட்சியுடைமை அல்லது காணிக்கான இழப்பீட்டின் மொத்த விலைமதிப்பு காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மொத்த இழப்பீடு என்பவற்றினை உள்ளடக்கியிருக்கும்.

காணிக்கு உரிமையாளர் எவரும் இல்லாதவிடத்து, காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் இழப்பீட்டுத் தொகையினை மாவட்ட நீதிமன்றில் வைப்பிலிடுவார். பிரிவு 10 இன் கீழ் நீதி மன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்ட காணி வழக்குகளுக்கு, நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு இணங்க இழப்பீடு கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

முன்வைக்கப்பட்ட இழப்பீடு தொடர்பில் காணி உரிமையாளர் அதிருப்தியடைந்து இருந்தால் அவர்கள் பிரிவு 22 இன் ஏற்பாடுகளின் கீழ் காணி சுவீகரிப்பு / கையகப்படுத்தல் மீளாய்வு சபைக்கு சட்டத்தின் பிரிவு 17 அளிப்புக் கடிதம் வழங்கப்பட்டு 21 நாட்களினுள் எழுத்து மூலம் மேன் முறையீடு செய்வர்.

இந்த மேன் முறையீட்டில் காணி சுவீகரிப்பு உத்தி யோகத்தரையும் கூட ஒரு பிரதிவாதிக ளில் ஒருவராக வழக்கில் பெயரிடப்பட வேண்டும். மீளாய்வுச் சபை காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரினால் வழங் கப்பட்ட இழப்பீட்டினை உயர்த்தும் அல் லது குறைக்கும் அதிகாரத்தைக் கொண் டிருக்கின்றது.

மீளாய்வுச் சபை தீர்மானத்தில் காணி உரிமையாளர் மேலும் அதிருப்தியடைவார்களாயின், அவர்கள் மேன் முறையீட்டு நீதிமன்றிற்கு / உயர் நீதி மன் றிற்கு சட்டப் பிரச்சினை மீது மட்டுமே மேன் முறையீடு செய்யமுடியும். மேன் முறையீட்டு நீதிமன்றம் / உயர்நீதி மன்றத்தின் தீர்மானமே இறுதியானது.

**காணியின் உடைமையைக் கையேற்றல்**

➢காணியின் உடைமையை மூன்று வெவ்வேறு வழிகளில் கையேற்கப்படுகின்றது.

அ) இழப்பீட்டுக் கொடுப்பனவின் பின்னர் உடைமையை கையேற்றல்- பிரிவு 38

ஆ) அவசர அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணியின் உடைமையைப் கையேற்றல் - பிரிவு 38அ (38A), மற்றும்

இ) பிரதான விலைமதிப்பீட்டாளரால் பூர்வாங்க விலைமதிப்பீடு செய்யப்பட்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறித்த தொகையை விஞ்சாத போது வெவ்வேறு உள்ளூர் அதிகாரசபைகளுக்காக அவசர அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு காணியின் உடைமையைக் கையேற்றல்.

இழப்பீடு கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர், காணியின் உடைமையைக் கையேற்பதற்கு காணி அமைச்சு, சட்டத்தின் பிரிவு 38 க்கு அமைய கட்டளையை வழங்கும். காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் அரசாங்கத்தின் சார்பில் காணியைக் கையேற்பார்.

அவசர நிலைமைகளின் மீது எந்தக் காணியின் உடைமையையும் உடனடியாக கையேற்க வேண்டிய தேவையேற்படுத்துமிடத்து, காணி கையகப்படுத்திக் கொள்ளப்படும் இடத்தின் அயலில் அல்லது பிரதேசத்தில் முதற்தடவையாக பிரிவு 2 அல்லது 4 இன் கீழான அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் எந்த நேரத்திலும் அமைச்சர், பிரிவு 38(அ) இன் கீழான கட்டளையை வழங்கலாம்.

கட்டடங்களின் அல்லது குடியிருக்கும் கட்டிடமொன்றின் பகுதியின் உடைமையைக் கையேற்பதற்கு முன்னர் அந்தக் குடியிருப்பாளருக்கு குறைந்த பட்சம் 48 மணித்தியாலங்கள் முன் அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

சொந்தக்காரரர் ஒருவர், காணியின் உடைமையைக் கையளிக்க விரும்பாத சந்தர்ப்பத்தில், காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், உடைமையைக் கையேற்க நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்ட பொது வரிப் பண உத்தியோகத்தர் ஒருவரின் சேவைகளை நீதவான் நீதிமன்றத்தின் கட்டளை ஒன்றை பிரிவு 42(2) இன் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

அதிகாரமளிக்கப்பட்ட கட்டளையை மீளப்பெறல் மற்றும் காணிகள் உடைமையைத் துறத்தல் கையகப்படுத்தப்பட்ட காணியினை அதன் சொந்தக்காரருக்கு திரும்ப ஒப்படைப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. இந்த நோக்கத்திற்காக, காணி அமைச்சர் பின்வரும் செயல்களைச் செய்யுமாறு கேட்க வேண்டும்.

1. அதிகாரமளிக்கப்பட்ட கட்டளையை மீளப்பெறல் - பிரிவு 38 கட்டளை வெளியிடப்பட்ட பின்னர் காணி ஒன்று அரசிடம் முற்றுமுழுதாக அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றபோது, காணியின் உடைமை இன்னமும் கையேற்கப்படாதிருக்குமிடத்து, பிரிவு 38 இன் கீழ் அமைச்சர் அதிகாரமளிக்கப்பட்ட கட்டளையை மீளப்பெற முடியும்.

(தொடரும்...)




# ஒரு செம்பு நீர்...



மகேந்திரபுரி என்னும் நாட்டை மகேந்திரவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். நீதியும் நேர்மையும் ஞானமும் உள்ள அரசனாகத் திகழ்ந்தான். அவனது ஆட்சியில் எந்த ஒரு வழக்கிற்கும் நல்ல நியாயம் வழங்கப்பட்டது. இதனால் அவனது புகழ் எங்கும் பரவியிருந்தது.

மகேந்திரபுரியில் சுந்தரி என்ற பெண் வாழ்ந்து வந்தாள். அவளிடம் இரண்டு பசுமாடுகள் இருந்தன. அம்மாடுகளின் மூலம் கிடைக்கும் பாலை விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தாள். வறுமைதான்... ஆனாலும் நேர்மையாக உழைத்துச் சம்பாதித்த பணத்தில் ஓரளவுக்குத் துன்பமில்லாமல் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

சுந்தரியின் எதிர்வீட்டில் ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பெயர் பரணி. அவளிடம் இருபது மாடுகள் இருந்தன. ஏராளமான வருமானம். இருந்தபோதிலும் கிடைத்த வருமானத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்து வந்தாள். அவளுக்கு சுந்தரியைக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. சுந்தரியை ஏதாவது சிக்கலில் மாட்டிவைக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனத்தில் வளர்த்துக் கொண்டிருந்தாள். அதற்காக சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் பரணி, சுந்தரியின் வீட்டிற்குச் சென்றாள். அவளிடம் தனக்கு இரண்டு படி வெண்ணெய் கடனாகக் கொடுக்கும்படி கேட்டாள்.

சுந்தரி மறுப்பு ஏதும் சொல்லாமல் உடனடியாக பரணி கேட்ட இரண்டு படி வெண்ணெயைக் கொடுத்து உதவினாள். அதை வாங்கிக் கொண்ட பரணி, விரைவிலேயே திருப்பித் தந்து விடுவதாகக் கூறி விட்டுச் சென்றாள்.

நாட்கள் பல சென்றன. பரணியிடமிருந்து வெண்ணெய் திரும்பி வரவேயில்லை. தனக்குச் செலவுக்குப் பணமில்லாததால், சுந்தரி தான் கொடுத்து உதவிய வெண்ணெயை திருப்பித் தருமாறு பரணியிடம் கேட்டாள்.

அதற்கு பரணி, "நீ எப்போது எனக்கு வெண்ணெய் கொடுத்தாய்? உன்னிடமெல்லாம் நான் கடன் வாங்குவேனா என்ன?" என்று அலட்சியமாகப் பதில் கூறினாள்.

சுந்தரி மனம் பதைத்துப் போனாள். இதற்கு என்ன செய்வது என்று யோசித்த அவள், நீதி வழுவாத அரசன் இருக்க நமக்கு என்ன கவலை என்ற முடிவுக்கு வந்தாள்.

வழக்கை மகேந்திரவர்மனிடம் கொண்டு சென்றாள்.

இருவரையும் விசாரித்த அரசன் மறுநாள் அரசவைக்கு இருவரும் வருமாறு உத்தரவிட்டான்.

மறுநாள் காலையில், அரண்மனைக்குள் நுழையும் வழியில் சேறும் சகதியுமாக இருக்கும்படி செய்தான். அங்கேயே இரண்டு செம்புகளில் தண்ணீரை நிரப்பி வைக்கும்படி தனது சேவகர்களுக்கு உத்தரவிட்டான்.

பரணியும் சுந்தரியும் அரசவைக்கு வந்தனர். வரும் வழியில் இருவரும் அந்தச் சேற்றைத் தாண்டி வரும்படி ஆனது. அப்போது இருவரின் கால்களிலும் சேறு அப்பிக் கொண்டது. அருகிலேயே செம்பில் நீர் இருப்பதைப் பார்த்த பரணி, அவசர அவசரமாக நீரை எடுத்துக் காலில் ஊற்றிக் கழுவினாள். சரியாகக் கழுவாததால் அவளுடைய கால்களில் நிறைய சேறு இன்னும் ஒட்டிக் கொண்டுதான் இருந்தது. அதோடு அரசவைக்குள் நுழைந்தாள்.

சுந்தரியோ, செம்பு நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றித் தனது கால்களை நன்றாகச் சுத்தம் செய்தாள். அதன் பிறகும் செம்பில் பாதியளவு நீர் இருந்தது.

இவையனைத்தையும் ஒரு காவலாளியை வைத்து கவனிக்கும்படி செய்திருந்தான் அரசன் மகேந்திரவர்மன். காவலாளியும் உடனடியாக நடந்தவற்றை அப்படியே அரசனிடம் சென்று விளக்கமாகக் கூறினான்.

அவனுடைய விளக்கத்தைக் கேட்ட அரசனுக்கு பரணியின் ஊதாரித்தனமும் பொறுப்பற்ற குணமும் புரிந்தது. சுந்தரி பொறுப்பும் ஒழுங்கும் தன்னிடத்தே கொண்டவள் என்பதும் தெரிந்தது.

அரசவை கூடியதும் மகேந்திரவர்மன் தனது தீர்ப்பைக் கூறினான். பரணி வெண்ணெயை வாங்கிக் கொண்டு பொய் சொன்னதால் தண்டனையாக அவளுடைய மாடுகளில் இரண்டை சுந்தரிக்குக் கொடுக்க வேண்டும். அதனால் வரும் இலாபத்தை ஓராண்டுக்கு சுந்தரி அனுபவித்துக் கொள்ளலாம் என்பதுதான் தீர்ப்பு.

மன்னனின் புத்திக் கூர்மையையும் நீதி வழுவாத குணத்தையும் அனைவரும் பாராட்டினர். அவனுடைய புகழ் மேலும் பரவியது.

## ஔவை கிழவி



ஔவைக்கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் தமிழ்க்கிழவி

கூழுக்காகக் கவி பாடும்
கூனற் கிழவி அவர் உரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே

## பொன்மொழிகள்

- முட்டாளின் முழு வாழ்கையும் புத்திசாலியின் ஒரு நாள் வாழ்க்கைக்குச் சமம்.

**அரேபிய பழமொழி**

- வாழ்க்கை பல கேள்விகளையும் பதில்களையும் கொண்டது: எப்பொழுதும் அது பௌர்ணமியாக இருப்பதில்லை, அமாவசையும்வரத்தான் செய்யும்.

**ஹோமர்**

- வாழத் தெரிந்தவர்கள் உலகத்தோடு ஒட்டி வாழக் கற்று கொண்டு விடுகிறார்கள்.

**பேர்னாட்ஷோ**

## விடுகதைகளும் விடைகளும்

- பாஸ்போர்ட்டும் வேண்டாம், விசாவும் வேண்டாம், உலகத்தையே சுத்தி வரலாம் அது என்ன?
கனவு
- மண்ணைச் சாப்பிட்டு மண்ணிலேயே வாழ்ந்து மண்ணோடு மண்ணாவான் அவன் யார்?
மண்புழு
- கதிர் அடிக்காத களம். உயிர் பறிக்கும் களம் அது என்ன?
போர்க்களம்
- உயரத்திலிருந்து விழுவான் அடியே படாது, தரைக்குத்தான் சேதாரமாகும் அது என்ன?
அருவி நீர்.
- பச்சைக் கீரை பொரிக்க உதவாது. வழுக்க உதவும் அது என்ன?
பாசி
- பேப்பர் கிடையாது, வாய்ப்பாடு தெரியாது. கணக்கிலே புலி. அது என்ன?
கல்குலேட்டர்

இந்த இரக்கமற்ற அநியாய உலகில் ஒரே ஒரு நபரை நீங்கள் நேர்மையான மனிதனாக மாற்ற முடியும். அந்த நபர் நீங்கள்தான். ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழரசுக் கட்சிக்கு எழுதும் கடிதம் இது

இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கு அன்பு வணக்கம்.

நீண்ட நெடுநாளாய் உங்களுக்குக் கடிதம் எழுதுவதை தவிர்த்து வந்தோம். காரணம் எழுதுகின்ற கடிதங்களுக்கு எந்தப் பதிலும் இல்லை எந்தப் பலனும் இல்லை.

இருந்தும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் கையாளப்பட்ட விதம் கண்டு அடைந்த வேதனையின் பாற்பட்டு இக்கடிதம் எழுதுகின்றோம்.

இந்தக் கடிதம் ஏதேனும் பயனுடையதாக இருக்குமா என்பதை நாமறியோம்.

இருந்தும் எழுதுகின்ற இக்கடிதத்தால் நாமும் எம்போன்ற மனநிலையில் இருப்பவர்களும் ஆற்றுப்பட வாய்ப்புண்டு.

இப்போதிருக்கின்ற நிலைமையில் ஆற்றுப்படுத்தல் அவசியமாகின்றது.

அந்தவகையில்தான் இக்கடிதம் எழுதப்படுகிறது. இருந்தும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்களா? என்பது கூடத் தெரியாத அளவில் ஒரு பெரும் கட்சி ஒரு சிலரிடம் மாட்டுப்பட்டு தன்னிலை இழந்து நிற்பது தெரிகிறது.

என்ன செய்வது அடுத்த தேர்தலில் கதிரை தேவை என்றிருந்தால், மௌனம் காப்பது தான் ஒரே வழி என்று நீங்கள் நினைத்திருக்கலாம்.

ஆனாலும் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை இயங்கவிடாமல் தடுப்பதில் ஊன் உறக்கம் மறந்திருந்த தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் இப்போது எதுவும் கதைப்பதாகத் தெரியவில்லை.

என்ன செய்வது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இயங்கவிடக்கூடாது. அவருக்கு எதிராக நீங்கள் சபையில் செயற்பட வேண்டும் என்ற கட்சியின் தலைமையிட்ட கட்டளையை நீங்கள் செய்யாவிட்டால் உங்கள் கதிரைகளும் அவுட்டாகியிருக்கும். ஆகையால் கூலிக்கு மாரடித்தீர்கள். பரவாயில்லை.

இப்போது நீங்கள் ஆதரித்த – நீங்கள் காப்பாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலப்பு நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியிருக்கிறார்.

நீங்கள் ஆதரித்த பிரதமர் இவ்வாறு கூறியிருப்பது பற்றி நீங்கள் பேசாமல் இருந்தால், அதன் பொருள் அவரின் கருத்துக்கு நீங்களும் ஆதரவு என்றாகிவிடும்.

தவிர, தொடர்ந்தும் பிரதமர் ரணிலின் அரசை ஆதரித்தால், வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையுயர்த்தினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை நீங்கள் ஆதரிப்பதாகவே பொருள்படும்.

ஆகையால் இதுவிடயத்திலேனும் தமிழரசுக் கட்சியினராகிய நீங்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதுதான் இக்கடிதம் எழுதுவதன் முக்கிய நோக்கமாகும்.

தவிர, ஜனாதிபதி மைத்திரியோடும் நீங்கள் சமச்சீரான உறவு நிலையைப் பேணியிருந்தால் இன்று அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரும் மாற்றம் தவிர்க்கப்பட்டிருக்கும். அதுவும் உங்களால் முடியவில்லை.

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பிலாவது ஒரு நிறுதிட்டமான முடிவை எடுங்கள்

# வாகன நெரிசலால் நாளொன்றுக்கு 10 மில்லியன் ரூபாய் வீண் விரயம்

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க விளக்கம்

வாகன நெரிசலால் நாளொன்றுக்கு 10 மில்லியன் ரூபாய் வீண் விரயமாகின்றது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாட்டின் பொருளாதார சுமையை குறைக்கும் வகையில் தனியார் துறையுடன் இணைந்து பல வீதி அபிவிருத்தி மற்றும் பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நாட்டினை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றால் முதலில் உறுதியான அரசாங்கம் ஒன்றும் உறுதியான அரசியல் கொள்கை ஒன்றும், தேசிய பாதுகாப்பு, சரியான சட்டதிட்டங்கள், தேசிய ஒற்றுமை மற்றும் முதலீட்டாளர் நம்பக்கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேபோல் பொதுப் போக்குவரத்து சேவை சரியான வகையில் அமைய வேண்டும். நாம் மேற்கு நாடுகளின் மூலமாகவே பொதுப்போக்குவரத்தை உருவாக்கினோம்.

நாம் சுதந்திரம் பெற்ற காலத்தில் அன்று எமது நாட்டில் 5 ஆயிரம் வாகனங்களே இருந்தது. ஆனால்70 ஆண்டுகளில் இன்று எமது நாட்டில் மக்கள் தொகை மூன்று மடங்கு அதிகரித்து 210 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

அதேபோல் 10 மடங்கால் வாகனங்கள் அதிகரித்துள்ளது. இன்று நாட்டில் 7 மில்லியன் மோட்டார் வாகனங்கள் உள்ளன என தெரிவித்துள்ளார். (ம-3)

# வாங்கிய கடனைவிடவும் அதிக பெறுமதிக்கே அம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை

## மகிந்த அணி பெருமிதம்

(கொழும்பு)

வாங்கிய கடனை விடவும் அதிக பெறுமதிக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'எமது ஆட்சியில் 840 மில்லியன் அமெரிக்க டொலர கடன் நிதியில் உருவாக்கிய அம்பாந்தோட்டை துறைமுகத்தை வெறும் நீச்சல் தடாகம் என விமர்சித்த பிரதமர் அதே துறைமுகத்தை 1.2 பில்லியனுக்கு விற்றுள்ளார்.

வாங்கிய கடனை விடவும் அதிக பெறுமதிக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்பட்டுள்ளது. ஆகவே எமது அரசாங்கம் பெற்ற கடனை செலுத்த வேண்டியதில்லை.

எமது நாட்டின் அபிவிருத்திகள் அனைத்துமே துறைமுகங்களை சார்ந்தே உள்ளது. சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகள் வளர்ச்சியடைய துறைமுகங்களை சரியாக பயன்படுத்திக் கொண்டமையே காரணமாகும்.

அதனை உணர்ந்தே எமது தலைவர் மகிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தை புனரமைத்தார்' என தெரிவித்துள்ளார். (ம-3)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இனி இல்லை

## ஜனாதிபதி அறிவிப்பு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்காலத்தில் நடத்துவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரீட்சையை இரத்துச் செய்வது தொடர்பில் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது. அத்துடன், புலமைப் பரிசில் பரீட்சை கட்டாயமானது என்ற சுற்றறிக்கையும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்காலத்தில் நடத்துவதில்லை என அரசு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொலநறுவையில் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

இதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யும் யோசனைக்கு தான் உடன்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த மாதம் 20ஆம் திகதி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)

### போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தாதியர்கள் அறிவிப்பு

சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தாதியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி இன்று செவ்வாய்க்கிழமை முதல் 2 தினங்களுக்கு இந்த போராட்டத்தில ஈடுபடவுள்ளதாக தாதியர்கள அறிவித்துள்ளனர். (மு-3)

### அதிபர்களுக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான விழிப்பூட்டல் செயற்றிட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குயின்ரஸ் தெரிவித்தார். (2-10)

### நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய பரிபாலன சபையின் தலைவராக என்.தவராஜாவும் செயலாளராக இ.டினேஸ்சன், பொருளாளராக சுகிர்தன், கணக்காய்வாளராக ந.அரியரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ)

### 'காவிரியைத் தந்தோம்' விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷனின ஏற்பாட்டில் நடைபெறும் கந்த புராண அருளுரையில் "காவிரியைத் தந்தோம்" என்ற தலைப்பில் இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில் விரிவுரை இடம்பெறும். (இ-5-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- வாழ்க்கையில் முன்னேற துணைபுரிவது எதுவோ அதுவே நன்மை. கீழ்நோக்கி வீழ்ச்சிக்குத் துணை புரிவது எதுவோ அது தீமை.
- தன்னம்பிக்கை கொண்டவன் வாழ்வு சரித்திரத்தில் இடம் பிடிக்கும். இந்த உண்மையை எப்போதும் மறந்து விடாதே.
- பொறாமையும், சோம்பலும், வெறுப்பும் அடிமையின் இயல்புகள். உள்ளத்தில் இவற்றை நுழைய அனுமதி அளிக்காதே.
- சுயநலத்தோடு வாழாதே. தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வதே நல்லொழுக்கம். எந்த நிலையிலும் சுயநலத்தை மறக்கவே பழகு.
- உயிர் வாழ்வதற்கு அறிகுறியே, வளர்ச்சிக்கு மேல் வளர்ச்சி அடைவது தான். துணிந்து நின்று பணி செய்தால் தான் இது சாத்தியம். எனினும், அதில் கிடைக்கும் பலனை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் வேண்டும்.

# அரியாலை சுதேசிய தேசியமட்ட கரப்பந்தாட்டம் முல்லைத்தீவு இணைந்த அணி சம்பியன்






அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் விளையாட்டு அதிகாரியும் தேசிய கரப்பந்தாட்ட வீரருமான மு.சிவரத்தினம் ஞாபகார்த்த தேசிய மட்டத்திலான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மின்னொளியில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு இணைந்த அணிகள் தேசிய சம்பியன் பட்டத்தை வென்றது.

கொழும்பு ஆர்ச்சஸ் விளையாட்டுக் கழகத்துடன் மோதிய முல்லைத்தீவு இணைந்த அணி 25:22, 28:26, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. சம்பியன்பட்டத்தை வென்றது.

போட்டியில் மூன்றாமிடத்தினை கே.கே.எஸ். ரகனஸ் விளையாட்டுக்கழகம் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# சண்டிலிப்பாய் பிரதேச சம்பியனானது சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழகம்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட இளையோர் கழகங்களுக்கான விளையாட்டுப்போட்டியில் ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி கடந்த 24 ஆம் திகதி நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெற்றது. பலத்த எதிர்பார்ப்பில் இடம் பெற்ற போட்டியில் சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழகத்தை எதிர்த்து நவாலி வடக்கு இளைஞர் கழகம் மோதியது.

பரபரப்பான இப் போட்டியில் சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழகம் பிரதேச அளைஞர் சம்பியன் பட்டத்தை வென்றது. (க)





அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக தாச்சிப்போட்டி முடிவுகள்

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கைதடி உதயசூரியன் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கைதடி கே.ஜி.எப். இப்போட்டி 3:3 என சமநிலையில் முடிந்தது. பின் மேலதிக மாக வழங்கிய 5 நிமிடத்தில் கே.ஜி.எப். அணி எந்தவித புள்ளியையும் பெறவில்லை. உதயசூரியன் அணி ஒரு புள்ளியை பெற்று வெற்றி பெற்றது. (க)

# ஐ.பி.எல்.போட்டிகளில் தொடர் வெற்றி கொல்கத்தா அணி புதிய சாதனை



சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கு எதிரான இருபது-20 போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அபார வெற்றி பெற்றதன் மூலம் 7 வருடங்களாக முதல் போட்டியில் வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை கொல்கத்தா தக்கவைத்துள்ளது.

இதுவரை நடந்த ஐபிஎல் தொடரில் தொடர்ந்து 6 முறை முதல் போட்டியை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் வழக்கம்போல சொல்கத்தா அணி முதல் வெற்றியை தக்கவைக்குமா என்ற எதிர்பார்த்து அந்த அணியின் ரசிகர்களிடையே எழுந்தது.

20 ஓவரின் முடிவில் சன்ரைசர்ஸ் அணி 3 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்தது.

இதனை அடுத்து 182 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தாவின் தொடக்க வீரர்கள் அதிரடியாக ஆட ஆரம்பித்தனர். இதில் நிதிஷ் ரனா 47 பந்துகளில் 68 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். அடுத்து வந்த அனியின் தலைவர் தினேஷ் கார்த்திக் 2 ஓட்டங்களில் வெளியேற, ஆண்ட்ரே ரசூல் மற்றும் சுப்மன் ஹில் கூட்டணி அதிரடியாக ஆடி அணியை வெற்றி பெற செய்தது.

இதில் ரசூல் 19 பந்துகளில் 49 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து 7 வருடங்களாக முதல் போட்டியில் வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை கொல்கத்தா

# சரியான நேரத்தில் ஓய்வெடுப்பேன் அதிரடி ஆட்டத்தின்பின் யுவராஜ்



டில்லி கபிடல்ஸ் அணிக்கு எதிராக அரைசதம் விளாசிய யுவராஜ் சிங், இளம் வீரர் ரிஷப் பண்ட் குறித்தும், தனது ஓய்வு முடிவு குறித்தும் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில், டில்லி கபிடல்ஸ் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. டில்லி அணியில் ரிஷப் பண்ட அபாரமாக ஆடி 27 பந்துகளில் 78 ஓட்டங்கள் எடுத்தார்.

அதேபோல் மும்பை அணியில் ஃபார்மில் இல்லை என்று விமர்சிக்கப்பட்ட யுவராஜ் சிங், அதிரடியாக விளையாடி 35 பந்துகளில் 3 சிக்சர், 5 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்கள் குவித்து ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

போட்டி முடிந்ததும் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் கூறுகையில், 'ரிஷப் பண்ட்டிடம் ஏராளமான திறமை கள் இருக்கின்றன. எதிர்கால த்தில் மிகச் சிறந்த வீரராக உருவாகுவார். அதனால் அவரை நாம் வளர்க்கும்போது பாதுகாப் பாக அவரை வழிநடத்த வேண்டும்.

உலகக் கோப்பை போட்டியில் ரிஷப் பண்ட் இடம்பெறுவாரா என எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய ரிஷப் பண்ட் பன் ஆட்டம் மிக அற்புதமாக இருந்தது' என தெரிவித்தார். மேலும், ஓய்வு குறித்து எண்ணம் உண்டா என கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த யுவராஜ் சிங்,

'சரியான நேரம் வரும்போது, ஓய்வு அறிவிப்பை நான் தான் முதலில் அறிவிப்பேன். யாரும் என் ஓய்வு குறித்து எனக்கு நெருக்கடி கொடுக்காத வகையில் ஓய்வை அறிவிப்பேன். கடந்த 2 ஆண்டுகளாக என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் ஏற்ற, இறக்கங்கள் இருந்து வருகின்றன.

இதனால் தெளிவான முடிவு எடுக்கமுடியாமல் நான் இருந்து வருகிறேன். எனக்கு நானே ஆய்வு செய்து கொண்டதில் இன்னும்சில காலம்கிரிக்கெட் போட்டியில் விளையாடலாம் என எனக்கு தோன்றியது என்றார் அவர். (க)

# இழப்பீட்டுக்கான பணியகத்துக்கு மூவரின் பெயர்கள்

(கொழும்பு)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இழப்பீடுகளுக்கான பணியகத்துக்கு உறுப்பினர்களாக நியமிப்பதற்கு மூன்று பேரின் பெயர்களை அரசியலமைப்புச் சபை பரிந்துரை செய்துள்ளது.

பிரபல சட்டவாளர் கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், செல்லத்தம்பி சுமித்ரா, எம். ஐ.எம்.ரபீக் ஆகியோரின் பெயர்களே ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை கூடிய அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில், மேலும் இரண்டு உறுப்பினர் பதவிகளுக்கான நேர்காணல் இடம்பெற்றது. விரைவில் அவர்களை பரிந்துரைப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் போருக்குப் பிந்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக, உருவாக்கப்படும் இரண்டாவது அதிகாரபூர்வ பொறிமுறையான இழப்பீடுகளுக்கான செயலகத்துக்கு 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)

# வடக்கின் பொதுப் போக்குவரத்தில் அரசு அக்கறைகாட்டவில்லை!

## பாராளுமன்றில் டக்ளஸ் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் தலைநகர் கொழும்பிலும், அதனை அண்டியப் பகுதிகளிலுமாக வசிக்கின்றவர்கள் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக தங்களது வாழ்நாளில் சுமார் 6 வருடங்களை வீதியில் செலவிட்டு வருவதாக அண்மையில் ஒரு தகவல்கள் குறிப்பிடுகின்றது.

இங்கே, போக்குவரத்து வசதிகள் இருந்தும், வாகன நெரிசல்கள் காரணமாக இந்த நிலை இம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அதேநேரம், வடக்கு மாகாணத்திலே குறிப்பாக வன்னிப் பகுதியிலே எமது மக்கள் போக்குவரத்து வசதிகளின்மை காரணமாக தங்களது வாழ்நாளில் பல வருடங்களாக வீதிகளில் நடந்தே காலத்தைக் கழித்து வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகள் தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், சுமார் 124 பாடசாலைகள் செயற்பட்டு வருகின்ற நிலையில், அதில் 70க்கும் மேற்பட்ட பாடசாலைக்குச் செல்வதற்கென போக்குவரத்து வசதிகள் இல்லை என்றே தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் பல்வேறு பகுதிகளில் இதே நிலைமையே காணப்படுகின்றது. இதன் காரணமாக மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி அந்தப் பகுதிகளில் வாழுகின்ற மக்களும் போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமங்களை அடைந்து வருகின்றனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு சாலையினால் அதிகளவிலான வருமானங்களை ஈட்டுவதாகக் கூறும் நிலையில், வடக்கு மக்களின் பொதுப் போக்குவரத்து சேவை தொடர்பில் போதிய அக்கறை காட்டாத நிலைமை தொடர்ந்து கொண்டே வருகின்றது.

எனவே, வன்னிப் பகுதியில் குறிப்பாக மீள்குடியேற்றப்பட்ட பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊடான போக்குவரத்துச் சேவைகளை பொதுப் போக்குவரத்துச் சேவை என்ற அடிப்படையில், விரிவுபடுத்துவதற்கும், அதிகரிப்பதற்கும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

அதேநேரம், கொழும்பிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நோக்கிய தான் இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துகளுக்கான ஆசன முற்பதிவுகளை மேற்கொள்கின்றபோது, பயண அனுமதிச் சீட்டுக்கும், முற்பதிவுக்குமான கட்டணத்தை விட அதி கூடிய நிதி பொது மக்களிடமிருந்து அறவிடப்பட்டு வருவதாக எமது மக்களிடமிருந்து தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இது தொடர்பில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றார். (மு-3)

# உள்நாட்டு தீர்மானங்களையே சுமந்திரன் நம்பியிருந்தார்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் இடம்பெற்ற அரசமைப்பு நெருக்கடியின் போது சுமந்திரன் எம்.பி, உள்நாட்டு தீர்மானங்களையே நம்பியிருந்தார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மேலும், யுத்த குற்ற விசாரணைக்களுக்கு மாத்திரம் கலப்பு நீதிமன்றத்தைக் கோருகிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நாட்டின் சகல துறைகளும் பலமடைந்ததை விரும்பாத காரணத்தாலேயே 2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் உதவியுள்ளது.

கடந்த வருடத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக அரசாங்கம் அமைக்கப்பட்ட போது, மேற்படி விடயத்தைக் கண்டுகொள்ள முடிந்தது.

ரணில் மீண்டும் பிரதமரானவுடன் பாராளுமன்றக் கலரியிலிருந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் கைதட்டி மகிழ்ந்தனர்.

பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் வசித்த மக்கள் தொகையில் 7 சதவீதமானவர்கள் கொல்லப்பட்டதோடு, இந்நாட்டு புராதன சொத்துகளையும் பிரித்தானியர்கள் திருடிச் சென்றனர். அவர்களே இன்று இலங்கையின் மனித உரிமைகள் பற்றிப் பேசுவது வேடிக்கையானது.

இவ்வாறிருக்க, கடந்த வருடத்தில் இடம்பெற்ற அரசமைப்பு நெருக்கடியின் போது உள்நாட்டு நீதிமன்றம் மீது நம்பிக்கை உள்ளதெனத் தெரிவித்திருந்த சுமந்திரன் எம்.பி சில தினங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது விசாரணைகளுக்கு கலப்பு நீதிமன்றம் கோரியிருந்தமை வேடிக்கையானது.

ஜனாதிபதிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கும் போது நீதிமன்றத்தைப் பாராட்டுகின்றவர்களுக்கு யுத்தக்குற்ற விசாரணையின் போது மாத்திரம் எவ்வாறு நம்பிக்கையில்லாமல் போக முடியும்.

அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரைக்கப்படும் அனைத்து விடயங்களும் இலங்கைக்குப் பாதகமானதாகவே அமைந்துள்ளதென அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ம-3)

# கிழக்கில் இராணுவ வசமிருந்த 5.5 ஏக்கர் காணிகள் விடுவிப்பு



(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகள் சில விடுவிக்கப்பட்டுள்ளன.

காணிகளைக் கையளிப்பதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது இராணுவ பாதுகாப்பு நோக்கத்துக்காக பயன்படுத்தி வந்த 5.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. குறித்த காணிகள் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவினால் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவிடம் கையளிக்கப்பட்டன.

அதன்படி திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் திரியாய் பகுதிகளில் 3 ஏக்கர் காணியும், அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணையில் 0.5 ஏக்கர் காணியும், திருக்கோவில் பகுதியில் 2 ஏக்கர் காணியும் அடங்கலாக மொத்தமாக 5.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், இராணுவ தளபதிகள் என பலர் கலந்து கொண்டனர். (மு-3)

# ராஜபக்ஷக்களின் குடும்பத்தை பிளவடையச் செய்ய முடியாது

## - டலஸ் அழகப்பெரும

மகிந்த ராஜபக்சக்களை பிளவைடயச் செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவினால் முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, பண்டாரநாயக்க குடும்பத்தை பிளவடையச் செய்தது போன்று, ரணில் விக்கிரமசிங்கவினால் ராஜபக்ஷ குடும்பத்தை பிளவடையச் செய்ய முடியாது. ஒளிந்து ஒளிந்து முகமூடி அணிந்திருந்த தேசிய அரசாங்கம் மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை பற்றிய விடயங்கள் தற்பொழுது அம்பலமாகியுள்ளன என்றார். (மு-3)

# ஜெனிவா பிரேரணையை அமுலாக்க 337,800 அமெ. டொலர்கள் தேவை

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அமுலாக்கத்துக்கு 3 லட்சத்து 37ஆயிரத்து 800 அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் பேரவையின் செயலகத் தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

மறுசீரமைப்பு, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை இலங்கையில் ஊக்கப்படுத்தும் நோக்கில் இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை எதிர்வரும் 2020ம் ஆண்டு வரையில் 12 கள ஆய்வுப் பணிகளையும், 2021ம் ஆண்டில் இரண்டு கள ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் அறிக்கையிடல் உள்ளிட்ட பணிகளுக்காகவும் குறித்த நிதி அவசியப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)


**கொவிசெத**
திகதி 2019.03.25
சீட்டிழுப்பு இலக்கம் 2074
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 07 27 45
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**
திகதி 2019/03/25
சீட்டிழுப்பு இலக்கம் 1415
எழுத்து 11
வெற்றி இலக்கம் 39 50 51 61 16 49
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 25/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 361
I 17
வெற்றி இலக்கங்கள் 21 23 65 66

**மஹஜன சம்பத**
திகதி 2019/03/25
சீட்டிழுப்பு இலக்கம் 3883
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 4 3 5 3 2
தேசிய லொத்தர் சபை

## க.பொ.த சா/த...

வருவதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகி 12ஆம் திகதிவரை நடைபெற்றது.

6 இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)

## ஏப்ரல் மாத இறுதி...

ஏப்ரல் இறுதியில் பருவகால மழைவீழ்ச்சி ஏற்படும்வரை நாடுமுழுவதும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுத்தப்படும் என்று மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

## மெகா கூட்டணி...

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்திற்கு இலட்ச கணக்கான மக்களை கொழும்பு அழைத்து வந்து வெகுவிமர்சையாக கொண்டாட திட்டமிட்டுள்ளோம்.

அடுத்து நடத்தப்படவுள்ள தேசிய தேர்தலை வெற்றி கொள்ளும் வகையில் இம்முறை மே தின பேரணியும் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை மறு சீரமைப்பதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிறிகொத்த கிராமத்திற்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் களுத்துறை மாவட்டத்தில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டது. மே தினத்திற்கு பின்னர் அநுராதபுரம் மாவட்டத்தில் சிறிகொத்த கிராமத்திற்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் மே தினத்திற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஆரம்பிக்கவுள்ள மெகா கூட்டணியை பிரகடனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட விரும்பும் கட்சிகளுடன் இணைந்து அடுத்த தேசிய தேர்தலை வெற்றி கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (மு-3)

## தமிழ்க் கட்சிகளை...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விடயங்களை ஐக்கியநாடுகளின் பாதுகாப்பு சபைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழ் மக்கள் தங்களது அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமையவேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க இடமளிக்கப்பட வேண்டும் என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரியுள்ளார். (மு-3)

## இலங்கைக்கு...

நரின் கொழும்பு கிளை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கையராகிய நாமே நாட்டின் சுயாதீன தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எமக்கேற்ற வகையில் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை அரசாங்கம் ஜெனிவாவிற்கு வழங்கிய உறுதிமொழிகளை செயற்படுத்த தவறிவிட்டது என்று குறிப்பிடும் தரப்பினர் சர்வதேச நீதி பொறிமுறையினை நாட முயற்சிக்கின்றமை நாட்டுக்கு எதிரான செயற்பாடாகும்.

எமது நாட்டின் நீதித்துறை சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசியலமைப்பிற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையில் இருந்து நீதித்துறையின் தனித்தன்மை பேணப்பட்டுள்ளது.

ஆகவே சர்வதேச நீதிபதிகள் உள்வாங்கும் முயற்சிகள் சாத்தியமற்றது. பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் சுயாதீனதன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிறைவேற்றப்படும். இதற்கு எத்தரப்பினரும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றார். (மு-3)

## மோ.சைக்கிள்...

பகல் மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள தேவாலயத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது.

இதில் உடுவில் வடக்கைச் சேர்ந்த அ.சிவகுருநாதன் (வயது-67) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றிரவு அவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-5-10)

## ஜனநாயக நாட்டி...

குமார வெல்கம, கட்சி ரீதியில் எவ்வித தீர்மானமும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஆட்சி முறை ஒருகட்டத்தில் மாறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஜனநாயக நாட்டில் குடும்ப ஆட்சி ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் செல்வாக்கினை வைத்துக் கொண்டு அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் ஆட்சிக்கு வருவது பொருத்தமற்றது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவது பொருத்தமற்றது. இவர் மீது எவ்வித தனிப்பட்ட பிணக்கும் கிடையாது. ஒரு நாட்டு தலைவர் ஒட்டுமொத்த மக்களின் நல்ல அபிப்பிராயங்களையும் பெற்றவராக காணப்பட வேண்டும். அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இவ்வாறான அபிப்பிராயங்கள் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு காணப்படுகின்றதா என்பது சந்தேகமாகவே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (மு-3)

## போர்க்குற்றங்க...

மத்திய அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகம் என்பன, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ் மக்களுக்கு அரசியல் யாப்பு ரீதியாக உரிய அந்தஸ்த்தை வழங்குவதுடன், அதிகாரப் பகிர்வை துரிதமாக்கவும் வலியுறுத்தப்படும் என்று அ.தி.மு.க தெரிவித்துள்ளது. (மு-3)

## ஐ.நாவின் தீர்மா...

முடியாது. அவர்கள் புலிவேசம் போட்டு ஆடுகின்றார்கள்.

ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு குப்பையில் தூக்கிவீச வேண்டும். அதன் பரிந்துரைகள் அனைத்தையும் அடியோடு நிராகரித்து உலக நாடுகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பவேண்டும்.

ஐ.நாவின் புதிய தீர்மானத்துக்கு இலங்கை அரச குழு இணை அனுசரணை வழங்கியமை மகா தவறு.

நாட்டின் ஜனாதிபதி சுமந்திரன் அல்ல. மைத்திரிபால சிறிசேனவே ஜனாதிபதி. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தான்தான் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் ஜெனிவாவில் செயற்பட்டுள்ளார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டது இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற தீர்மானமே ஆகும். இதனை வெறும் தீர்மானமாக நாம் நினைக்கக்கூடாது.

இந்தத் தீர்மானத்தை குப்பையில் தூக்கி வீச வேண்டும். குருதி சிந்தி நாட்டை மீட்டெடுத்த எமது இராணுவத்தை எவரும் தண்டிக்கவே முடியாது என கூறியுள்ளார். (ம-3)

## தமிழ்க் கூட்டமை...

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், "மூன்றாவது தடவையாக இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல், நீதி நியாயம், காணாமற்போனோர் விடயம், மீள் நிகழாமை, நல்லிணக்கம் மற்றும் அதிகாரம் சம்பந்தமாக எல்லாக் கருமாங்களும் முதல் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தீர்மானத்தையும் நாம் வரவேற்கின்றோம். இதனை முன்னின்று நிறைவேற்றிய பிரித்தானியா தலைமையிலான உலக நாடுகளுக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும். அதில் உள்ள பரிந்துரைகளை காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதை அரசு செய்யாமல் இருந்தால் அதன் விளைவுகள் வேறு விதமாக அதாவது மிகவும் பாரதூரமாக இருக்கும். ஐ.நா.வின் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத் தேவை இலங்கை அரசுக்கு இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-3)

## இலங்கைக்கு...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்கள் ஜெனிவா சென்றனர்.

இவர்கள் கடந்த வாரம் ஆணையாளர் மிச்சேல் பச்செலெட்டையும், ஜெனிவா செயலகத்தின் செயலாளர் மைக்கல் மொல்லரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மனித உரிமைகளை மேம்படுத்த இலங்கை மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பாராட்டியுள்ளார்.

மேலும், ஜெனிவா தீர்மானங்களை அமுல்படுத்த இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

குறிப்பாக அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் தயார் என ஆணையாளர் தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சந்திப்புகளில் மன்னார் மனித புதைகுழி மற்றும் காணிவிடுவிப்பு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயாரித்த அறிக்கை அண்மையில் மனித உரிமைகள் பேரவையில் சமர்பிக்கப்பட்டது.

இதில், பொறுப்பு கூறல் விடயத்தில் இலங்கை பாரிய தாமதத்தை கொண்டுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-3)


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (8220)

தொடர்புகளுக்கு : 076 707 0069 M.Suren

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



(C-5806)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

### வேலைவாய்ப்பு

இலங்கையில் பல மாவட்டங்களில் வியாபித்துள்ள எங்களது நிறுவனத்தில் உங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பு.

* உங்கள் திறமைக்கு மட்டும் முதலிடம். * உங்களது விடாமுயற்சி, பயிற்சியுடன் பதவி உயர்வு. * குறுகிய காலத்தில் கூடிய சம்பளத்தினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு (45,000/=) * உங்களுக்கென்று ஒரு புதிய வாகனம் ஒன்றினை பெறும் வாய்ப்பினை கூடிய விரைவில் பெறலாம். * வாழ்க்கையில் ஒரு தடவை மட்டும் கிடைக்கும் இந்த வாய்ப்பினை நழுவ விட்டுவிடாதீர்கள்.

தொடர்புகளுக்கு: 076 459 7725 (C-5883)





வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8223)

### FALC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு (C-5872)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை.



(8224)

- உணவு தயாரிப்பவர்
- சிற்றுண்டிகள் தயாரிப்பவர்
- றொட்டி வேலையாள்
- பரிமாறுபவர்
- காசாளர்

குறிப்பு : ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 0778560455, 0761425651


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.